# The Book

## By

## Garry Jacobs

**(கதைச் சுருக்கம் – தமிழில்)**

# பொருளடக்கம்

முன்னுரை........................................................................3

பகுதி 1: தேடல்....................................................................4

பகுதி 2: ஆத்மஞானப் படிக்கட்டுகள்............................................11

பகுதி 3: செயல்முறை ..........................................................18

பகுதி 4: வாழ்வு ................................................................29

பகுதி 5: ஜீவியம் ..............................................................38

பகுதி 6: பரிணாமம்.............................................................46

இக்கதையில் இடம் பெற்றுள்ள சில முக்கிய கதாபாத்திரங்கள்.....54

# The Book

## By Garry Jacobs

## முன்னுரை

ஸ்ரீ அன்னை சத்திய ஜீவிய சக்தியை Feb 29, 1956 அன்று உலகுக்குக் கொணர்ந்தார். அந்தச் சக்தியையும், அதன் அருமை பெருமைகளையும் யாரும் அறிந்தாரில்லை. இருப்பினும் உலக வரலாற்றின் முக்கியமான நிகழ்ச்சிகளில் அது தன் தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டேதான் இருக்கிறது. இக்கதையின் கருவும் நிகழ்வும் அச்சக்தியின் பல்வேறு கால கட்டங்களின் வெளிப்பாடு தான். அத்தகைய நேரங்களில் ஒரு பெயரிடப்படாத, எழுத்தாளரின் பெயர் இல்லாத ஒரு மர்மமான புத்தகம் உலகில் தோன்றி அந்த சத்திய ஜீவிய சக்தியின் தாக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. அத்தகைய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் சில: 1964-இல் அமெரிக்க நகரம் Berkley-இல் மாணவர்களின் பேச்சுரிமைப் போராட்டம், 1968-இல் Czechoslovakia நாட்டில் நடந்த சோவியத் அடக்குமுறையும், அதன் இராணுவ அணிவகுப்பும், 1971-இல் இரஷ்ய அரசியல் வரலாற்றில் கோர்பசேவ், கட்சி இளைஞர் அணியின் உறுப்பினராக நியமனம், 1989-இல் பெர்லின் சுவர் உடைந்து, ஜெர்மனி ஒன்றானது போன்ற பல நிகழ்ச்சிகள். இக்கதையின் வெவ்வேறு நாயகர்கள் அத்தகைய தருணங்களையும், **"அந்த புத்தகத்தையும்**" கண்டுள்ளனர். எனினும், ஒருவராலும் **அந்த புத்தகத்தை** உடமையாக்கிக் கொள்ள முடியவில்லை.

**அந்த புத்தகம்** ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பல காலமாகக் காத்திருந்தது. அது என்ன நோக்கம், யார் அதை உடைமையாக்கிக் கொள்ளப் போகிறார்கள், அடுத்து என்ன நிகழும்? என்பன போன்ற பல கேள்விகளுக்கு இனி வரும் பக்கங்களைப் புரட்ட, **அந்தப் புத்தகமே** விடையுறுக்கும்...

***

# பகுதி 1: தேடல்

புதிதாய் புலரும் நாளும், புதிதாய் மலரும் மாதமும், புத்தம் புதிய வருடமும் புதிதாகச் சாதிப்பதற்கான பொக்கிஷத்தை விதையாகக் கொண்டிருக்கும். அப்படியெனில் ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை வரும் புது மில்லினியம் எத்தகையதாய் இருக்கும்? அப்படிப்பட்ட மகத்தான ஆற்றல்கள், யோசனைகள், சக்திகள், எதிர்கால நம்பிக்கைகள் கொண்ட 2000-ஆம் ஆண்டில் இக்கதை அமெரிக்காவில் துவங்குகிறது.

புளோரிடா மாகாணம் (Florida), St Fort Lauderdale நகரத்தில், உலகத்தின் தலைசிறந்த விஞ்ஞானிகள், அறிஞர்கள் பங்கு கொள்ளும் “செயற்கை நுண்ணறிவு மற்றும் கணிதவியல்” (Artificial Intelligence and Mathematics) தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கு, ஜனவரி 5 முதல் 7 வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கருத்தரங்கின் பிரதான பேச்சாளர்கள், பேராசிரியர்கள் டெண்ட் (Dent) மற்றும் ஸ்டேன் (Stearne). முற்றிலும் எதிரான கருத்தையுடைய இருபெரும் அறிஞர்களின் கருத்து விவாதத்தை ரசிப்பதற்கென்றே பலர் அங்கு வந்திருந்தனர். புரபசர் டெண்ட் இனி வரும் காலம், இயந்திரங்களின் காலம் என நம்புபவர். புரபசர் ஸ்டேனின் வாதமோ வேறு. இயந்திரத்தைப் படைத்தது மனிதன், அது மனித முன்னேற்றத்திற்கு உதவக் கூடிய கருவி மட்டுமே, மனித ஜீவியமே இயந்திரங்களை விடப் பெரியது என்பது புரபசர் ஸ்டேனின் அசைக்க முடியாத நம்பிக்கை.

முதல் இரண்டு நாட்கள் பல்வேறு விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி சொற்பொழிவாற்றினார்கள். அவர்களில் இக்கதை நாயகர்கள் நால்வரும் அடக்கம் -- டேன், ரே, வினய் மற்றும் ஆன்யா (Dan, Ray, Vinay and Anya). கருத்தரங்கின் இறுதி நாளில், இரு புரபசர்களின் ஆழ்ந்த கருத்து விவாதம் பார்வையாளர்களைப் பரவசப்படுத்துவதாக இருந்தது. நீண்ட நேரம் நடந்த விவாதத்தில், யார் வெற்றியாளர் என முடிவு செய்ய இயலாமலேயே அவ்விவாதமும் கருத்தரங்கும் நிறைவு பெற்றன. அக்கருத்தரங்கின் முக்கியத்துவத்தை யாரும் அறியவில்லை. அப்போது ஒத்த கருத்துடைய டேன், ரே, வினய், மற்றும் ஆன்யா ஆகியோர் இணையும் களமாக

அது விளங்கிற்று. அனைத்தும் பிரபஞ்ச விதிப்படி நடக்கின்றது என்பதும், அவர்களே அதை வழிநடத்தும் முன்னோடிகளாய் விளங்குவர் என்பதும் அவர்களுக்கே அப்பொழுது தெரியாது. அவர்கள் ஆன்மாவின் ஆர்வமும், பரநலப்பண்பும் அந்நால்வரையும் ஒருவரையொருவர் அறியச் செய்தது, நண்பர்களாக்கியது, அடுத்த கட்டத்திற்கு இணைந்து செயல்பட வைத்தது. அவர்களின் நோக்கம் மனித ஜீவியத்தையும், செயற்கை நுண்ணறிவையும் தனித்தனி கூறுகளாய்ப் பார்க்காமல், இணைத்து செயல்பட வைக்கும் முயற்சி. இந்நிலையில் ஒருவன் மட்டும் அக்கருத்தரங்கிற்கு வேறு ஒரு நோக்கத்தோடு வந்தது மட்டுமல்லாமல், அந்நால்வரையும் அவர்களறியாமல் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அவன் ஆல்பர்ட் சைமன்.

அடுத்து வந்த பல நாட்களுக்கு மின்னஞ்சலில் அவர்களின் கருத்துப்பரிமாற்றம் தொடர்ந்தது. இறுதியாகப் பொது மக்களுக்கு ஷேர் மார்க்கெட்டில் முதலீடு செய்வதற்கு சரியாக அறிவுரை வழங்கக் கூடிய ஒரு செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தைத் தங்கள் முதல் புராஜெக்ட் (project)-ஆக அவர்கள் தேர்ந்தெடுத்தனர். அதற்காக ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து, மென்பொருளை உருவாக்கி, விற்பனை செய்வதாகத் திட்டம். தங்கள் கையிருப்பில் உள்ள சேமிப்போடும், நண்பர்களிடமும், மற்றும் ஹெட்ஜ் நிதிக் கடனும் வாங்கி அவர்கள் அந்நிறுவனத்தை ஆரம்பித்தனர். 2000-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாளன்று கலிபோர்னியா மாநிலம், பெர்க்கிலியில் (Berkeley), Millennium Artificial Intelligence (MAI) என்னும் நிறுவனம் தொடங்கப் பெற்றது. டேன் அதன் தலைவராகவும், வினய் விற்பனைப்பிரிவுத் தலைவராகவும், ரே தொழில் நுட்பத் தலைவராகவும், ஆன்யா ஆராய்ச்சிப் பிரிவையும் பொறுப்பெடுத்துக் கொண்டனர். லிம்பியா (Limpia), MAI-ன் முதல் உதவியாளராகவும், லாரன் (Lauren) அலுவலக நிர்வாகியாகவும் பணியிலமர்த்தப் பட்டனர். அதன் பின்னர் திட்டத்திற்குத் தேவையான பல தொழில் நுட்ப வல்லுனர்கள் பணியிலமர்த்தப்பட்டனர்.

அடுத்து வந்த நாட்களில் திடீரென ஏற்பட்ட பங்குச்சந்தை வீழ்ச்சியினால், அவர்களின் கையிருப்பில் இருந்த பணத்தின் அளவு வெகுவாகக் குறைந்து விட்டது. இருப்பினும் மனம் தளராமல் தங்கள் முதல் மென்பொருளைத் தயாரிப்பதில் அவர்கள்

மிகுந்த அக்கறையும், கடின உழைப்பும் காட்டினர். MAIS (Market Artificial Intelligent Systems) என்று பெயரிடப்பட்ட அந்த மென்பொருள் 2002 செப்டம்பரில், MAI-க்கு ஹெட்ஜ் நிதிக் கடன் கொடுத்த ஜேக் (Jake) என்பவரால் சோதனை செய்து பார்க்கப்பட்டது. அது பங்குச்சந்தையின் ஏற்றத்தாழ்வுகளை மீறி அபார பலனைக் கொடுத்தது. அதைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்திருந்த வேளையில் SEC (Securities and Exchange Commission)-இன் குற்றச்சாட்டு பேரிடியாக வந்திறங்கியது. ஆம்! பங்குச் சந்தையின் ஏற்றத்தாழ்வுக்கு MAIS காரணமாக இருக்கக்கூடும் என்னும் குற்றச்சாட்டு அது. அது உண்மையாக இல்லாத போதிலும் MAI–ஆல் அதை நிரூபிக்க முடியவில்லை. அவர்கள் இரவு பகலாக உழைத்தும் பலனில்லை. இறுதியில் அந்தக் கடினமான முடிவு எடுக்கப்பட்டது! இரண்டு வருடங்கள் உழைத்து, தங்கள் அனைத்துப் பணத்தையும் செலவு செய்து உருவாக்கிய முதல் மென்பொருளை அவர்கள் விட்டுவிட முடிவு செய்தனர். இதில் அதிகம் பாதிக்கப்பட்டது வினய், ஏனென்றால் அது அவர் கொடுத்த திட்டம். இருப்பினும் நண்பர்களுக்காக அவர் விட்டுக்கொடுத்தார்.

அடுத்த வந்த பல நாட்கள் MAI-க்கு மிகவும் சோதனையான காலம். பணப் பற்றாக்குறை, புது புராஜெக்ட் இல்லாமை, பணியாளர்கள் வேலை நீக்கம் எனத் தடுமாறியது MAI. இருப்பினும் அத்தகைய சூழ்நிலையில் அவர்களுக்கிடையில் இருந்த நட்பு வலுப்பட்டு, தங்கள் AI கனவை, இலட்சியத்தை விடாமல் காப்பாற்றி வந்தனர். 2004-ஆம் ஆண்டின் துவக்கத்தில் அவர்களின் கையிருப்புப் பணம் அனைத்தும் கரைந்து போய், அனைத்து புது புராஜெக்ட் முயற்சிகளும் தோற்றுவிட்ட நிலையில், தங்களின் கடைசி முயற்சியாய் NASA-வில் சமர்ப்பித்திருந்த ஒரு திட்டத்திற்காக நம்பிக்கையுடன் காத்திருந்தனர்.

அந்நிலையில் அவர்களின் விதியை மாற்றி எழுதப்படும் அந்த நாளும் வந்தது. 2004-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் நாள் அனைத்துப் பார்ட்னர்களும் வார இறுதியில் விடுமுறைக்குச் சென்றுவிட, டேன் மட்டும் தன் அலுவலகத்தில் MAI-இன் கடந்த கால நிகழ்வுகளை அசைபோட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென வந்தது ஒரு மின்னஞ்சல். அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த NASA விடமிருந்து!. “MAI சமர்ப்பித்திருந்த

திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது" என அறிவித்தது அந்த மின்னஞ்சல். அப்படிப்பட்ட பேரிடியான சமயத்திலும் டேன் React செய்ய வில்லை. பார்ட்னர்களுக்கு உடனே போன் செய்து கலவரப்படுத்தவில்லை. அடுத்து என்ன செய்வது என தெரியாமல் வீட்டிற்குச் சென்ற டேன், தொலைக்காட்சியை பார்க்க ஆரம்பித்தார். அதில் "San Francisco 49ers" மற்றும் பெரிதும் வெற்றி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட "Cincinnati Bengals" -க்கு இடையே 1989-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மிகச் சிறந்த "Superbowl" அமெரிக்க கால்பந்து விளையாட்டு மறுஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. ஆட்டம் முடிய இன்னும் 3 நிமிடங்களேயிருந்த நிலையில் "San Francisco 49ers"-இன் தோல்வி தவிர்க்கமுடியாததைப் போலத் தோன்றியது. இருப்பினும் அந்த அணியின் சிறந்த விளையாட்டு வீரரான ஜோ மான்டானாவுக்கு (Joe Montana) எவ்வித கலக்கமும் இல்லை. சிறிதும் உற்சாகம் குறையாமல் விளையாடிய அவர், அடுத்த இரண்டு நிமிடத்தில் ஆட்டத்தின் போக்கையே மாற்றியதோடு மட்டுமல்லாமல், அவருடைய அணியையும் வெற்றி பெறச் செய்தார். என்ன ஒரு உற்சாகமான, உத்வேகமான, அசாத்தியமான விளையாட்டு? அதுவும், தோல்வியின் விளிம்பிலிருந்தாலும், அதீத நம்பிக்கையுடன் என்ன ஓர் அற்புதமான விளையாட்டு? ஜோ மான்டானா கொடுத்த புத்துணர்ச்சியோடும், நம்பிக்கையோடும் டேன் நடக்க ஆரம்பித்தார்.

எந்த இலக்குமின்றி அவர் செய்த பயணத்தில் டெலிகிராப் தெருவில் இருக்கும் மோஸ் (Moe's Books) புத்தகக் கடையை வந்தடைந்தார். அங்குள்ள புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது **ஒரு புத்தகம்** மேல் அடுக்கிலிருந்து தவறி அவர் மேல் விழுந்தது. **அந்த புத்தகத்திற்கு** பெயரும் இல்லை, எழுதியவர் பெயரும் இல்லை! ஆச்சரியத்துடன் அதைப் புரட்டிப் பார்த்தவருக்கு **"சாதனையே மகிழ்ச்சி, மகிழ்ச்சியே சாதனை"** என்னும் வரிகள் புது உற்சாகத்தைக் கொடுத்தன. கடையின் விற்பனையாளருக்கும் **அந்த புத்தகத்தைப்** பற்றி ஒன்றும் தெரியவில்லை. எனவே அவர், டேன் **அந்த புத்தகத்தை** எடுத்துச் செல்ல அனுமதித்தார். வாழ்க்கையில் இருந்த கடைசி வாய்ப்பும் NASA மின்னஞ்சலில் போய்விட்டது என்ற கவலை ஏதுமின்றி, புது உற்சாகத்துடன், புது மகிழ்ச்சியுடன் அவர் **அந்த புத்தகத்துடன்** வீட்டுக்குத் திரும்பினார்.

மறுநாள் அவருக்கு ஓர் ஆச்சரிய அதிர்ச்சி காத்திருந்தது. NASA அவர்களுக்கே அந்த புராஜெக்டைக் கொடுத்திருந்தனர். முந்தைய மின்னஞ்சல் தவறாக அனுப்பப் பட்டதாம்! **அந்த புத்தகம்** வருவதற்காகவே அப்படியெல்லாம் நடந்திருக்குமோ? NASA-வின் புராஜெக்ட் PAIS – Psychological Artificial Intelligence System எனப் பெயர் சூட்டப்பட்டது. அது அண்டவெளி விண்வெளி நிலையத்தில் (ISS – International Space Station) பணியாற்றுவதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவும் மென்பொருளைத் தயாரிப்பதற்கான புராஜெக்ட். NASA அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்ததற்கான காரணம், மற்ற போட்டியாளர்களின் அணுகுமுறையான “ஒத்த கருத்துடையவர்களைத் தேர்ந்தெடுத்தல்” என்னும் புராதன அணுகுமுறையைப் போலல்லாது அவர்கள் புதிதாகச் சிந்தித்திருந்தது தான். அதற்குப் பதிலாக, தேர்ந்தெடுக்கும் நபர்கள் மிகவும் செயல்திறன் மிக்கவர்களாகவும், மாற்றத்தை விரும்பக்கூடிய கொள்கையுடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் புராஜெக்ட்டை சமர்ப்பித்திருந்தனர். எனினும் அத்தகு சூழ்நிலையில் அப்படி ஒரு கோட்பாடு எங்கும் இல்லாததால், அதற்கான கருத்துக்களை எங்கிருந்து எடுப்பது, எடுத்தாலும் அதை எப்படி AI மென்பொருளாக மாற்றுவது என அப்பொழுது அவர்களுக்குத் தெரியவில்லை.

இதற்கிடையில் டேன் **அந்த புத்தகத்தையும்**, அதன் அத்தியாயங்களின் அமைப்பையும் கண்டு வியந்து கொண்டிருந்தார். அதே சமயத்தில் அவர் இணைய பக்கம் ஒன்றில் கண்ட கட்டுரைகள் அவர் மனத்தைக் கவர்ந்தன. அவைகள் அப்புத்தகத்தின் வெவ்வேறு தலைப்பினாலான கருத்துக்களை வாழ்வில் எப்படிப் புரிந்து கொள்வது என உதாரணங்கள் மூலமாகவும், கதைகள் மூலமாகவும் விளக்கின. அவைகள் *Archives* என பெயரிடப்பட்டன. மேலும் மற்றொரு வகையான கருத்துக்களும் அவர் கண்ணில் பட்டன. அவை புதுமையாக வாழ்வின் உண்மைகளை, கருத்துக்களை, சட்டங்களை ஓரிரு வரிகளில் விளக்கின. அவைகள் *Messages* எனப் பெயரிடப்பட்டன. விந்தையாக ஒவ்வொரு கட்டுரையின் இணைய பக்கத்தையும் ஒரு நாள் மட்டுமே அவர்களால் காண

முடிந்தது. அதனால் அவர்கள் அக்கட்டுரைகள் பின்னால் தேவைப்படும் என எண்ணி பிரிண்ட் எடுத்து வைத்துக்கொள்ளத் தொடங்கினர்.

ஒருநாள் பார்ட்னர்கள் அனைவரும் PAIS பற்றி விவாதித்துக் கொண்டிருந்த பொழுது, அது விவாதத்தை மீறி வாக்குவாதமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென ஒரு போன், NASA விடமிருந்து. அது அவர்களுக்குப் புராஜெக்ட் கொடுத்ததை மேலிடத்து உத்தரவால் மறுபரிசீலனை செய்யப்போவதாகவும், புராஜெக்டை நேரடியாக விளக்கி, NASA நிபுணர் குழு ஏற்றுக்கொள்ளும் நிறுவனமே இனி புராஜெக்ட்டை தொடரலாம் என அறிவித்தது. பார்ட்னர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து விட்டு, முழு மூச்சுடன் NASA நேர்முக விளக்கத்திற்காகத் தயாராயினர். அங்கு அவர்களுக்கு கடுமையான சவால் காத்திருந்தது. NASA குழுவிலிருந்து ஒரு குறிப்பிட்ட நபர் அவர்களைப் பலவகையான கேள்விகள் கேட்டு சோதனை செய்தார். சூழ்நிலையைப் புரிந்து கொண்டு டேன் அமைதியாகிவிட, எப்பொழுதும் அமைதியாய் இருக்கும் ரே எழுந்து அவர் கேள்விகளுக்குத் திறம்பட பதிலளித்ததோடு மட்டுமல்லாமல் மற்ற குழுவினரின் மனத்தையும் கவர்ந்தார். இறுதியில் MAI-க்கே அந்தப் புராஜெக்ட் திரும்பவும் அளிக்கப்பப்பட்டது. அச்செய்தி, அமெரிக்காவின் அரசாங்க அலுவலகம் வரை எட்டியது. MAIS பற்றிக் கேள்விப்பட்ட கிரிகோரி தாம்சன் (Gregory Thompson - Secretary of State for International Affairs) பெரும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அதன் பின்னர் பார்ட்னர்கள் அனைவரும் பெர்க்லி திரும்ப, ரே மட்டும் தன்னுடைய குடும்ப நிகழ்ச்சிக்காக Boston சென்று விட்டார். அங்கும் அவருக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. ஏற்கனவே MAI பற்றியும், ரே மீதும் நல்ல அபிப்ராயம் அவர் குடும்ப உறுப்பினர்களுக்கு இல்லாததால், அங்கு அவர் பல்வேறு கேள்விகளுக்கு உள்ளானார். அத்தகு ஓர் எதிர்மறையான சூழ்நிலையில் மறுநாள் மாடிப்படியிலிருந்து இறங்கும் பொழுது வழுக்கி விழுந்ததில் கால் உடைந்து அவர் ஒரு வாரத்திற்கும் மேலாக படுக்கையிலிருக்கும்படியானது. விந்தையான நிகழ்ச்சிகள் MAI அலுவலகத்திலும் தொடர்ந்தன. லாரன் MAIS-இல் மீண்டும் வேலைக்குச் சேர்க்கப்பட்ட டோனி பிரஸ்டன் (Tony Preston) என்பவனைப் பற்றி டேனிடம் புகார் கொடுக்க ஆரம்பித்தாள். டோனி

ஏற்கெனவே MAIS திட்டத்தில் வேலை பார்த்து வந்தான். அந்தத் திட்டம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அவனும் பணிநீக்கம் செய்யப்பட்டான். எனினும் அதன் பின்னர் அவன் ஜேக்குடன் சேர்ந்து திருட்டுத்தனமாக MAIS pirated copy மூலம் வேலை செய்து கொண்டிருந்தான். தொடக்கத்தில் நன்றாகச் சென்று கொண்டிருந்தாலும் பின்னாளில் ஜேக் பெரும் பணம் இழக்க, அதற்கு டோனி தான் காரணம் என ஜேக் குறை கூற ஆரம்பித்தான். ஒருநாள் அவர்களுக்கிடையே வாக்குவாதம் முற்ற, அவன் டோனியைத் திடீரென வேலை நீக்கம் செய்துவிட்டான். அதனால் ஆத்திரமடைந்த டோனி MAIS மென்பொருளை யாரும் இனி பயன்படுத்த முடியாதபடி செய்துவிட்டு வெளியேறிவிட்டான். இதையெல்லாம் கேள்விப்பட்ட லாரன் இப்படிப்பட்ட ஒரு நபர் MAI-க்கு தேவையா என எண்ணி டேனிடம் புகார் கொடுத்தாள்.

NASA சந்திப்பிலிருந்து நடந்த அனைத்து அனுபவங்களையும் டேன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவருக்கு **அந்த புத்தகம்** நல்ல வழிகாட்டுதலைக் கொடுத்தது. அதன் மூலம் அவர் **"சுமுகம்"** என்பது முக்கியமான காரணி எனக் கண்டறிந்தார். சரியான முடிவுகள் எடுப்பதன் மூலம் சுமுகக் குறைபாடு நீங்கி சுமுகம் பிறக்கும் எனவும் அறிந்துகொண்டார். ரேயும் உடல் நலம் பெற்றுத் திரும்பி வந்த பிறகு, பார்ட்னர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். அக்கூட்டத்தில் **"சரியான முடிவுகள் எடுப்பதே"** PAIS புராஜெக்டின் அடிப்படைக் கோட்பாடு என டேன் விளக்கினார். எனவே தங்கள் நோக்கம் சரியான மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளை விட்டுவிட்டு, சரியான முடிவுகளை எடுக்கும் மென்பொருளைத் தயாரிப்பதன் மூலம் யாரும், எந்நிலையிலும் இணைந்து பணியாற்றலாம் என எடுத்துக்கூறினார்.

இவ்வாறு MAI வளர்ச்சியடைந்து கொண்டிருக்க, இக்கதை மற்றோர் கோணத்தில் தொடர்கிறது. AI கருத்தரங்கில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆல்பர்ட் சைமன் **அந்த புத்தகத்தை** தேடி அலைந்து கொண்டிருந்தான். அவன் மோஸ் புத்தகக்கடைக்கும் சென்று, அங்கிருந்த CCTV வீடியோக்கள் மூலம் **அந்த புத்தகம்** டேனிடம் இருக்கிறது எனவும் கண்டறிந்தான்.

# பகுதி 2: ஆத்மஞானப் படிக்கட்டுகள்

PAIS புராஜெக்டை அடுத்து எப்படி வளர்ப்பது என்பதற்கான குறிப்பு **"வெற்றிகரமான முடிவெடுப்பதற்கு என்றும் தவறாத வழிமுறைகள்"** என்னும் *Archives* கட்டுரையின் மூலம் அவர்களுக்குக் கிடைத்தது. அது ஒருவிதமான Matrix மூலம் எப்படிப்பட்ட முடிவுகள் எந்த மாதிரி விளைவுகளைக் கொடுக்கும் என விளக்கியது.

| | |
|---|---|
| Q-II<br>உள்ளே : +<br>வெளியே : - | Q-I<br>உள்ளே : +<br>வெளியே: + |
| Q-III<br>உள்ளே : -<br>வெளியே : + | Q-IV<br>உள்ளே : -<br>வெளியே : - |

அந்த Matrix-இல் நான்கு கட்டங்கள் உள்ளன.

- முதலாவது கட்டத்தில், நம் மனத்திலும், வெளியிலும் நேர்மறையான காரணிகள் உள்ள பொழுது -- கண்டிப்பாக வெற்றியும்,
- இரண்டாவது கட்டத்தில், நம் மனத்தில் நேர்மறைக் காரணிகளும், வெளியில் எதிர்மறைக் காரணிகளும் உள்ள பொழுது -- போராடி வெற்றி கிடைக்குமென்றும்,
- மூன்றாவது கட்டத்தில், நம் மனத்தில் எதிர்மறைக் காரணிகளும், வெளியில் நேர்மறைக் காரணிகளும் உள்ள பொழுது -- முதலில் வெற்றி மாதிரி தெரிந்து பின் தோல்வியில் முடியுமென்றும்,
- நான்காவது கட்டத்தில், நம் மனத்திலும், வெளியிலும் எதிர்மறையான காரணிகள் உள்ள பொழுது -- கண்டிப்பான தோல்வியும்

கிடைக்குமென்று அது அழகாக எடுத்துக் கூறியது. மேலும் நம் மனநிலையை மாற்றுவதன் மூலம் எவ்வாறு ஒரு கட்டத்திலிருந்து மறுகட்டத்திற்கு முன்னேறுவது எனவும் அக்கட்டுரை விளக்கியது. அவர்கள் MAI-இன் கடந்த கால முடிவுகளில் அந்த Matrix-ஐ பொருத்திப்பார்க்க, அக்கட்டுரையின் கருத்து தெளிவாக விளங்கியது.

அச்சரியான முடிவுகளை எடுக்க உதவும் Matrix, PAIS புராஜெக்டின் அடிப்படைத் தத்துவமானது. அதனால் அவர்கள் எதிர்பார்த்ததை விட வேகமாக அந்த மென்பொருள் தயாரானது. அது காலத்தையும் வெகுவாகச் சுருக்கியதால் 2004 நவம்பர் மாதத்தில் அவர்களால் அதை NASA-வுக்கு சமர்ப்பிக்க முடிந்ததது. அந்த மென்பொருள் நல்ல வரவேற்பையும் நல்ல பெயரையும் MAI-க்கு பெற்றுத்தந்தது. அதன் மிகப்பெரிய வெற்றி வாழ்வின் பல்வேறு துறைகளில் அதன் பயன்பாடு இருப்பதற்கான சாத்தியத்தை உணர்த்தியது. அதன் அடிப்படையில் டேன் AIS[1] (Advanced Intelligent System) என அடுத்த திட்டத்திற்குப் பெயரிட்டார். 1 என்னும் குறியீடு முதல் தொடக்கம் என அவர் விளக்கமளித்தார்.

MAI-க்கு அடுத்த புராஜெக்ட் ரே தன் விமானப் பயணத்தின் பொழுது சந்தித்த ரிச்சர்ட் கோர்க் (Richard Courke) என்னும் டப்ளின் பல்கலைக்கழகத்தின் புரபசரால் வந்தது. அவர் அயர்லாந்து அரசாங்கத்தின் பேரில் ஒரு குழுவில் இரகசியமாக செயல்பட்டு வந்தார். அவர் வடக்கு அயர்லாந்து பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது எனப் புரியாமல் MAI உதவியை நாடினார். MAI பார்ட்னர்கள் அப்பிரச்சினையைத் தீவிரமாக ஆராய்ந்து, அப்பிரச்சினைக்குக் காரணம் பொது மக்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது ஏற்பட்ட கடுமையான வெறுப்பேயன்றி மற்ற சமய, அரசியல் காரணங்கள் இல்லை என விளக்கினர். மேலும் அப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார வளர்ச்சி, மற்றும் சாதகமான சூழ்நிலைகளால், அக்கசப்பினை மாற்றுவதற்குச் சரியான தருணம் அது எனக் கண்டறிந்து அதன் அடிப்படையில் ஓர் அறிக்கை தயார் செய்து 2005 - ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அயர்லாந்து அரசாங்கத்திடம் சமர்ப்பித்தனர். அதன் பின் நடந்ததை உலக வரலாறு எடுத்துச் சொல்லும், ஏனென்றால் 2005 ஜூலை மாதத்தில் IRA (Irish Republican Army) தன்னுடைய ஆயுதப் போராட்டத்தை முழுவதுமாகக் கைவிட்டது. அந்த வெற்றிக்குப் பின்னால், MAI தன்னுடைய பின்னணியை வெளிக்காட்டாத பொழுதிலும், விஷயம் அமெரிக்க அரசாங்கத்தின் காதுகளுக்கு எட்டியது. தாம்சன் உடனே அவர்களைப்பற்றிய முழு விவரங்களையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டான்.

2005-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஒரு விமானப் பயணத்தில் Accor Tire-இன் தலைமை நிர்வாக அதிகாரியான லியோ டெக்கெரை (Leo Dekker) வினய் சந்தித்ததன் மூலம் அடுத்த புராஜெக்ட் MAI-க்கு வந்தது. அந்த நேரத்தில், விற்பனைச்சந்தையின் உறுதியற்ற தன்மை காரணமாக, Accor Tire நிறுவனம் தங்கள் கடைசி எஞ்சிய ரேயான் உற்பத்தி செய்யும் பெல்ஜிய ஆலையை மூட முடிவு செய்தது. இருப்பினும் அதைக் காப்பாற்றும் கடைசி முயற்சியாக MAI-ஐ அணுகியது. AIS[1] அப்பிரச்சினையை பகுத்தாராயும் பொழுது, அந்நிறுவனத்தின் தோல்வி உறுதியானது, அது பிழைக்க வழியில்லை என அதன் கணிப்பு கூறியது. ஒரு உண்மை, மற்றும் உண்மையைப் போன்ற தோற்றம் இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை அதனால் பிரித்தறியத் தெரியவில்லை. டேன் **அந்த புத்தகத்தை** அலசிய பொழுது, அந்நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் அபிப்ராயத்தை மாற்றும் பொழுது, அது உளவியல் சக்தியாக செயல்பட்டு வாழ்வில் நல்ல விளைவுகளைக் கொண்டு வரும் என அறிவுரை வழங்கியது. இதையொட்டி, AIS[2] மென்பொருள் உருவாக்கப்பட்டது, அது Accor Tire நிறுவனத்திற்கு எதிர்காலத்தில் காத்திருக்கும் சாத்தியங்களை உறுதிப்படுத்தியது. உண்மையிலேயே AIS[2] இன் முடிவுகள் AIS[1]-ஐ விட வித்தியாசமானதாகவும், எதிரானதாகவும் இருந்தன. AIS[2]-இன் இறுதி முடிவு, ஆலை தொடர்ந்து இயங்குவதோடு மட்டுமல்லாமல், அந்நிறுவனத்தால் 24 மாதங்களில் மூன்று முதல் ஆறு மடங்கு லாபம் சம்பாதிக்க முடியும் என முன்னுரைத்தது. அந்தச் சூழ்நிலையில் அத்தகைய முடிவை நம்புவது கடினம் என்பதால், அது நிர்வாகக் கூட்டத்தில் ஏராளமான எதிர்ப்புக்கு உள்ளானது. இருப்பினும் அவர்களின் Chairman தலையீட்டால் MAI-இன் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. AIS[2] முன்னுரைத்தது போலவே அதன் பின்னர் வந்த மாதங்களில் அந்நிறுவனம் இலாபம் பார்க்கத் தொடங்கியது. 2005-2006-ஆம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையில் அது உறுதியானது. அதன் இலாப விகிதம் 290% அதிகரித்துள்ளது என அந்த அறிக்கை கூறியது.

2005 ஆம் ஆண்டு மே மாதத்தில், சில விந்தையான நிகழ்வுகளை MAI பார்ட்னர்கள் சந்தித்தனர். சமீப காலங்களில் அதிக வேலைப்பளு காரணமாக டேனுக்கு **அந்த புத்தகத்தை** படிப்பதற்கான போதுமான நேரம் இல்லை. ஒருநாள் திடீரென **அந்த புத்தகத்தின்** பக்கங்கள் ஒளி மங்கியதாகக் காணப்பட்டன. அதைக் காப்பாற்ற டேன் எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. மற்றொரு பார்ட்னரான ரே ஒரு பயணத்தின் பொழுது தங்கிய ஹோட்டலில் தன் அறையின் முன்னால் ஒரு துப்பாக்கிச் சூட்டை எதிர் கொண்டார், அதில் அவரது பெயரை ஒத்த ஒரு நபர் இறந்து விட்டது அவருக்கு பெரும் கலக்கத்தைக் கொடுத்தது. வினய் ஒரு வணிகக் கூட்டத்தில் $AIS^2$ பற்றி விளக்கிக் கொண்டிருந்த பொழுது, ஒரு நபர் எழுந்து அதில் உலகத்தில் உள்ள அனைத்து சுய முன்னேற்ற நூல்கள், பயிற்சிகள் எடுத்துக்கூறும் "மனப்பான்மை" என்னும் காரணி அதில் இல்லை என சுட்டிக்காட்டினார். அந்த நேரத்தில் வினய் சமாளித்தாலும் அவர் கூற்றை அவரால் மறுக்க முடியவில்லை. இவ்வாறான அனைத்து விந்தையான நிகழ்வுகளைப் பற்றி டேன் யோசித்துக் கொண்டிருந்த பொழுது, **அந்த புத்தகம்** ஒரே சமயத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் தொடர்புள்ளவை என விளக்கியது. அடுத்த வந்த நாட்களில் பார்ட்னர்களுடன் நடத்திய விவாதத்தின் போது, அனைத்து நிகழ்ச்சிகளின் பின்னணியில் **"மனப்பான்மை"** என்னும் காரணி மறைந்துள்ளதைக் கண்டறிந்தார். உண்மையில் அக்கருத்தை அவர்களுக்கு உணர்த்த வாழ்வு கொடுத்த நிகழ்ச்சிகள் அவைகள்!

அந்த மனப்பான்மையின் சக்தியை ஆன்யா ஓர் அனுபவத்தின் போது நிதர்சனமாக உணர்ந்தாள். அன்றொரு நாள் தனது பல்கலைக்கழக பேராசிரியருடன் தொடர்புடைய அனைத்து கசப்பான தருணங்களும் அவள் நினைவுக்கு வந்தன. ஆன்யா பெருமுயற்சி எடுத்து, அவர் மீதுள்ள கசப்பான உணர்வுகளை மாற்றி இறுதியில் அவர் ஆரம்பத்தில் உதவிய தருணங்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தாள். அந்த மனமாற்றத்திற்கு வாழ்க்கையின் பரிசு உடனடியாக வந்தது! அடுத்த நாள் காலை, ஆன்யாவுக்கு ஒரு மின்னஞ்சல் காத்திருந்தது. அது வேறு யாரும் இல்லை. இவ்வளவு நாட்கள் தொடர்பில் இல்லாத அதே பேராசிரியர்! அவர் 500,000 டாலர்கள் மதிப்புள்ள ஒரு CITI பேங்க்

திட்டத்தில் பணி செய்வதாகவும், அதற்கு AIS உதவி தேவைப்படுவதாகவும் கேட்டு எழுதியிருந்தார். அக்கடிதத்தின் முத்தாய்ப்பாக அவர் ஆன்யாவை “தான் பார்த்ததிலேயே மிகச் சிறந்த மாணவி!” என எழுதிருந்தார். உடனடியாக MAI **"மனப்பான்மை"** காரணியை மையமாகக் கொண்டு $AIS^3$ மென்பொருள் தயாரிப்பைத் தொடங்கியது. டேனும் ஒருநாள் **அந்த புத்தகத்தை** காப்பாற்றுவதைப் பற்றிக் கவலைப்படாமல், உண்மையிலேயே அதற்கு கவனம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு முழு அத்தியாயத்தை எடுத்து படிக்கத் தொடங்கினார். அவர் அந்த அத்தியாயத்தை முடிக்கும் பொழுது, **அந்த புத்தகம்** முன்பு போல் முழு ஒளியையும் பெற்று பிரகாசமாகக் காட்சியளிக்கத் தொடங்கியது.

அதன் பின்னர் MAI-க்கு வேலைப்பளு கூடி விட்டது, ஒவ்வொருவரும் எவ்வளவு கடுமையாக உழைத்தும் வேலை குறைவதாகத் தெரியவில்லை. மேலும் அந்த நேரத்தில் அதன் நிதி நிலைமையும் சரிவர இல்லை. அனைத்திற்கும் காரணம் ஒவ்வொரு பார்ட்னர்களும் தனித்தனியே திறமையானவர்களாக விளங்கினாலும், ஒரு பெரிய நிறுவனத்தை நிர்வகிப்பதில் அவர்களுக்குப் போதிய அனுபவம் இல்லை. மேலும் **அந்த புத்தகம்** மற்றும் *Archives*–ஐ அவர்கள் ஆராய்ச்சி செய்த பொழுது **“ஆர்கனைசேஷன்”** இல்லாததே அவர்களின் வேலைப்பளுவிற்குக் காரணம் என அவை அறிவுறித்தின.

**"வாழ்வு ஜீவியத்தால் மலர்கிறது;**

**ஜீவியம் ஆர்கனைசேஷனை உயர்த்துவதால் வளர்கிறது”**

என்னும் கோட்பாட்டை அவர்களுக்கு **அந்த புத்தகம்** உணர்த்தியது. மேலும் *Archives* ஒரு கட்டுரையில், ஒவ்வொரு சிறிய செயலுக்குப் பின்னாலும் மிகப்பெரிய ஆற்றல் புதைந்து கிடக்கிறது, அதன் வெளிப்படும் சக்தி கிடைக்கக்கூடிய ஆதாரங்களைச் சார்ந்தது அல்ல, அது ஜீவியத்தின் தீவிரத்தைப் பொறுத்தது என விளக்கியது. அதன் அடிப்படையில் MAI நிறுவனம் அனைத்து ஊழியர்களுடனும் ஒரு வெளிப்படையான சந்திப்பை நடத்தியது. அந்தச் சந்திப்பின் முடிவில், விற்பனைச்சந்தையின் வாய்ப்புகளை ஈர்க்கும் வகையில் ஆர்கனைசேஷன் சக்தியை முழுவதுமாகத் தங்கள் வேலையில் முறைப்படுத்த வேண்டும்

என ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டது. அதற்காக ஊழியர்கள் கொடுத்த பல திட்டங்களை நிறைவேற்ற சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவர்களின் பெருமுயற்சியின் பலனாய் காலமும் செலவும் சுருங்கி, இலாபம் வர ஆரம்பித்தது. அவ்வாறு MAI புத்துயிர் பெற்றது. அதன் அடிப்படையில் $AIS^4$ மென்பொருள் **“ஆர்கனைசேஷனை”** மையமாக வைத்து அவர்கள் உருவாக்க ஆரம்பித்தனர்.

லெம்பெ (Lempe) நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த லாரனின் சகோதரர் கிரெக் (Greg) மூலமாக வந்த அடுத்த புராஜெக்ட் $AIS^4$-க்கான சோதனைக்களமாக மாறியது. அந்த நேரத்தில், துல்லியமான கருவிகள் உற்பத்தி செய்யும் அந்த லெம்பெ கம்பெனி திவாலாகும் விளிம்பில் இருந்தது. அந்நிலையிலிருந்து தங்களை யாரவது ஒருவர் அதிசயமாகக் காப்பாற்ற முடியுமா எனக் காத்திருந்தது. அந்நிலையில் லாரன் மூலம் அவர்களுக்கு MAI தொடர்பு கிடைத்தது. லெம்பெ நிலைமையை வினய் பகுத்தாய்வு செய்த பொழுது $AIS^3$ மற்றும் $AIS^4$ இரண்டுமே அதன் தோல்வி தவிர்க்க முடியாதது என முன்னுரைத்தன. 1980-ஆம் ஆண்டு காலவாக்கில் திவாலாகும் விளிம்பில் இருந்த கார் உற்பத்தி செய்யும் கம்பெனியான கிரைஸ்லர் கார்ப்பரேஷன், லீ அயகோக்கா (Lee Iacocca) என்னும் தைரியமான தலைவரின் கீழ் அதிசயிக்கத்தக்க வகையில் காப்பாற்றப் பட்டது. அதைப் படித்த வினய் அதை ஆராய்ந்த பொழுது $AIS^3$, $AIS^4$ இரண்டும் லெம்பெவுக்கு கொடுத்த அதே பதிலைக் கொடுத்தன. ஏனென்றால் அவர்கள் மென்பொருள் இன்னும் முழுமையடையவில்லை. அத்தகைய தகவல்களை மையமாக வைத்து, வினய் மற்ற பார்ட்னர்களைச் சமாதானப்படுத்தி அந்த புராஜெக்டை ஏற்கும்படிச் செய்தார். அதன் மூலம் அவர் தங்களின் மென்பொருளை மேலும் செம்மையானதாக்க முடியும் என நம்பினார்.

இவ்வாறாக MAI விரைவாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்த வேளையில் அதற்கு எதிர்ப்பும் கூடவே வளர்ந்தது. **அந்த புத்தகத்தை** திருடுவதற்குப் பல முயற்சிகள் நடந்தன. ஒவ்வொரு முறையும் அருளின் செயல்பாட்டால் **அந்த புத்தகம்** காப்பாற்றப்பட்டது. அச்சுறுத்தலின் தீவிரம் அதிகரித்துக்கொண்டிருந்த பொழுது, டேன், தான் சந்தித்த ஒரு

கொள்ளை முயற்சியைத் தொடர்ந்து பெர்க்லி காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளித்தார்.

***

## பகுதி 3: செயல்முறை

2006-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் MAI லெம்பெ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அவர்கள் புராஜெக்டில் வேலை செய்யும் பொழுது, **சக்தியின்மையே** அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என MAI கண்டறிந்ததது. அச்சக்தியை எப்படி வெளிக்கொணர்வது, புத்துணர்ச்சியாக்குவது என்பதற்கு *Archives* ஒரு சூத்திரத்தைக் கொடுத்து உதவியது.

**“ஆர்வம் சக்தியை வெளியிடுகிறது,**

**நோக்கம் அச்சக்திக்கு வலிமை சேர்க்கிறது,**

**ஆர்கனைசேஷன் அந்த வலிமை மிகுந்த சக்தியை செயல்திறன் ஆக்குகிறது.**

**திறமையோடு அச்செயல்திறனைப் பயன்படுத்தும் போது அது வாழ்வில் வெற்றியாக மாறிப் பலன் அளிக்கிறது”**

மேலும் அவர்கள் கிரைஸ்லர் கம்பெனியின் வியத்தகு வளர்ச்சியை ஆராய்ச்சி செய்த பொழுது லீ அயகோக்கா மேலே சொன்ன சக்தியின் கோட்பாட்டை பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் கிடைத்தன. அதனடிப்படையில், **சக்தியைக்** காரணியாக வைத்து AIS$^5$ மென்பொருள் உருவாக்கப்பட்டு, அதன் வழிமுறைகளை லெம்பெ கம்பெனியில் பயன்படுத்த ஆரம்பித்தனர். இந்த புராஜெக்டில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்த பொழுது அவர்கள் கண்ட ஆச்சரியமான ஒற்றுமை லெம்பெ மற்றும் MAI ஒன்று மற்றொன்றின் பிரதிபலிப்பே என்பது. லெம்பெ பழம் பெரும் கம்பெனியானதால் அதில் ஆர்கனைசேஷன் நன்றாக இருந்தது, ஆனால் அதில் ஜீவன் இல்லை. MAI -இல் அனைவரும் செய்யும் காரியத்தை உணர்ந்து ஜீவனோடு செய்தார்கள், ஆனால் அங்கு ஆர்கனைசேஷன் அந்த அளவுக்கு இல்லை. வாழ்வு இருவரையும் இணைத்ததற்குக் காரணம், ஒன்று மற்றதைப் பார்த்து, கற்று, பலனடைய வேண்டும் என்பதற்காகத்தான்! AIS$^5$ - இன் வழிமுறைகளை இரு கம்பெனிகளும் பயன்படுத்த ஆரம்பித்தவுடன், இரண்டும்

வியத்தகு வகையில் மாற்றத்தைக் கண்டன. அதன் பின் லெம்பெ கண்ட துரித வளர்ச்சி அனைவருக்கும் ஆச்சரியமூட்டுவதாக இருந்தது.

லெம்பெ புராஜெக்டில் கண்ட வியத்தகு முன்னேற்றம் காரணமாக, வாழ்வு எங்கிருந்தோ அவர்களுக்குப் புதிய வாய்ப்புகளைக் கொடுக்கத் தொடங்கியது. அதுவரை வந்த வாய்ப்புகளிலேயே பெரிய வாய்ப்பு, நார்வே நாட்டிலுள்ள Auku கம்பெனியின் புராஜெக்டாகும். அது பிரான்ஸிலுள்ள Lyon கம்பெனியை Auku கம்பெனி வாங்கிய பின்னர், இருவேறு கலாச்சாரங்களை இணைத்து செயலாற்றவைப்பதில் உள்ள பிரச்சினைகளைப் பற்றிய புராஜெக்ட். **அந்த புத்தகத்தின்** மூலம் அது பிரச்சினையல்ல, அது மிகப்பெரிய வாய்ப்பு என MAI பார்ட்னர்கள் கண்டறிந்தனர். பல்வேறு கலாச்சாரங்களுடன் இணைந்து செயலாற்றுவதால், அது அவர்களுக்கிடையேயுள்ள குறுகிய மனப்பான்மை மற்றும் அபிப்ராயங்களைத் தாண்டி, மனோரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் அவர்கள் பெருமளவு வளர்வதற்கு உதவி செய்கிறது. அதனடிப்படையில் **கலாச்சாரம் மற்றும் சமுதாயத்தைக்** காரணிகளாகக் கொண்டு $AIS^6$ உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் $AIS^6$ மற்றும் Auku புராஜெக்ட் இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து வளர்ந்தன. வாழ்வை அவர்கள் ஒரு தளத்தில் முழுவதுமாகப் பூர்த்தி செய்ததால், அடுத்து வந்த நாட்களில் அவர்கள் கற்பனையே செய்திராத திசைக்கு வாழ்வு அவர்களை எடுத்துச் சென்றது.

2006-ஆம் ஆண்டு ஜூலை மாதம், அமெரிக்க அரசுத் துறை திடீரென MAI-ஐ அணுகி மேற்காசிய பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு AIS-இன் உதவியை நாடியது. அக்கூட்டத்திற்கு கிரிகோரி தாம்சன் தலைமை தாங்கினான். மற்ற AI நிபுணர்களும் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் MAI சார்பில் டேன் மற்றும் ரே கலந்து கொண்டனர். MAI பற்றி முழுவதுமாக அறிந்திருந்த அவர்கள், $AIS^6$-இன் சிறப்பான வெற்றிக்குப் பின்னாலுள்ள காரணத்தையும், அவர்கள் எங்கிருந்து அத்தகைய கோட்பாடுகளைப் பெறுகின்றனர் என்பதையும் அறியும் பொருட்டு, பல்வேறு விதமாக கேள்விகள் கேட்டு MAI-ஐ ஆழம் பார்த்தனர். அனைத்துக் கேள்விகளுக்கும் ரே திறம்பட பதிலளித்தும்,

அவர்களுக்கு அதில் முழு திருப்தியில்லை. அக்கூட்டத்தின் முடிவில் i) ஈராக் உள்நாட்டு கிளர்ச்சியாளர்களின் வன்முறை மற்றும் ii) பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு ஆகிய தலைப்புகளில் $AIS^6$-ஐ ஆராய்ந்து, மூன்று வார காலத்திற்குள் அறிக்கை தருமாறு MAI - ஐப் பணித்தனர். ரே உடனே ஒரு குழுவை அமைத்து, கடினமாக உழைத்து, குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன் அறிக்கையை சமர்ப்பித்தார்.

அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் அடுத்த வந்த சந்திப்பில் வெட்ட வெளிச்சமாகியது. அச்சந்திப்பில் தாம்சன் மட்டும் அவர்களிடம் தனியே பேசினான். அமெரிக்க அரசாங்கம் $AIS^6$ தவறானவர்களின் கையில் சிக்கினால், அது தேசியப் பாதுகாப்புக்கு கேடு விளைவிக்கும் என எண்ணுவதால், அவர்கள் கம்பெனியை ஒரு அரசாங்கம் சார்ந்த “அங்கிள் சாம்” கம்பெனிக்கு விற்றுவிடுமாறு மிரட்டினான். அதைக்கேட்டு அதிர்ச்சியில் உறைந்திருந்த பார்ட்னர்களை நன்கு ஆலோசித்து, நல்ல முடிவை அடுத்த சந்திப்பில் சொல்ல வேண்டும் என்றான். அவர்களுக்கிடையே நடந்த உரையாடல்களை மறைவுச் சுவரின் பின்புறமிருந்து, கர்ட் லெவின் (Kurt Levin) கேட்டுக்கொண்டிருந்தார். அவர் வேறு யாருமில்லை. இஸ்ரேல் நாட்டின் மொசாட் (Mossad) உளவுத்துறையைச் சார்ந்தவர். மேலும் அவர் இக்கதைக்குப் புதியவர் இல்லை. ஏனெனில், இக்கதையின் தொடக்கத்தில் நடந்த கருத்தரங்கில் அவரும் பங்கு கொண்டவர்!

பார்ட்னர்கள் உடனடியாகச் சந்தித்து, வந்துள்ள ஆபத்தைப் பற்றி நன்கு விவாதித்தனர். அனைத்து கருத்துக்களையும் கவனமுடன் கேட்டு, டேன் தனது எண்ணத்தை வெளியிட்டார். **அந்த புத்தகத்தையும்**, தங்கள் இலட்சியத்தையும் காக்கும் பொருட்டு, அமெரிக்க அரசாங்கத்தின் அச்சுறுத்தலுக்குப் பணியாமல், அவர்கள் கொடுக்கும் பணத்திற்கு அடிபணியாமல் இறுதி வரை போராடுவதே தன்னுடைய முடிவு என்றார். மற்ற பார்ட்னர்களும் அவர் கூறியதில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து ஏற்றுக் கொண்டனர். மேலும் **அந்த புத்தகத்தை** ஆராய்ந்து பார்க்கையில், அந்த அச்சுறுத்தல் புதிய மாற்றத்தை விரும்பாத எதிர்மறை தீய சக்திகளின் விளைவு என்றும், அதை எப்படி எதிர் கொள்வது எனவும் ஆலோசனை வழங்கியது. மேலும் **அந்த புத்தகம்**,

அப்பிரச்சினையின் வாயிலாக சிறிய நிறுவனமாக, தனியாக ஒதுங்கியிராமல், உலகளாவிய நிலைக்கு அவர்களை எடுத்துச்செல்வதாக உணர்த்தியது. **அந்த புத்தகத்தின்** அறிவுரைப்படி அவர்கள் AIS மென்பொருளின் குறியீடுகளை, பல பகுதிகளாகப் பிரித்து, என்கிரிப்ட் செய்து அதை அமெரிக்க அரசாங்கத்தின் ஆதிக்கம் இல்லாத உலகின் பிற நாடுகளில் உள்ள சர்வர்களில் சேமித்து விட்டார்கள். அதனுடைய இரகசிய கடவுச்சொல்லை இரண்டாகப் பிரித்து டேன், ரே ஒரு பகுதியையும், வினய், ஆன்யா மற்றொரு பகுதியையும் வைத்துக்கொண்டனர். அந்தத் திட்டத்தின் மூலம், அரசாங்கம் அவர்களைத் தடை செய்தாலும் வேறு நாட்டிலிருந்து அவர்களால் இயங்க முடியும். அனைத்து திட்டங்களும் விரும்பியவாறு நல்லபடியாக நிறைவேற, MAI பார்ட்னர்களுக்கு ஒரு தற்காலிக நிம்மதி வந்தது.

2006-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 அன்று டேன், ரே மற்றும் வினய், தாம்சனையும் அவரது உதவியாளர்களையும் சந்தித்தனர். AIS[6]-இன் திறனையும், ஆழத்தையும் மீண்டும் நிரூபிப்பதற்காக ரே மூன்று விதமான ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்து விளக்கினார். தாம்சன் அவர்களை இடையில் குறுக்கீடு செய்து தனிப்பட்ட முறையில் விவாதிக்க விரும்பினான். தனிப்பட்ட சந்திப்பில், அரசாங்கத்தின் அச்சுறுத்தலை மீண்டும் உறுதிப்படுத்தினான். அரசாங்கம் AIS[6] நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கருதுவதாகவும், அதனால் அவர்களுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு, அங்கிள் சாம் நிறுவனத்திற்கு 40-60 மில்லியன் டாலர்களுக்கு விற்பது மட்டுமே என விளக்கினான். அதற்கு பதிலளிக்கும் வகையில் வினய் எழுந்திருந்து MAI-இன் சொத்து மதிப்பு எவ்வளவு என்றும், மேலும் அது எந்த அளவு வளர்வதற்கு சாத்தியம் இருக்கிறது என்பதையும் விளக்கியது தாம்சனுக்குக் கசப்பாக இருந்தது. இருப்பினும் தாம்சன் தன் நிலையிலிருந்து சிறிதும் இறங்கி வரவில்லை, மாறாக அமெரிக்க அரசாங்கத்தின் ஒரே ஓர் உத்தரவின் மூலம் அவர்களைச் செயல்பட விடாமல் தடுக்க முடியும் எனவும் பயமுறுத்தினான்.

இறுதியாக டேன் தனது துருப்புச் சீட்டைக் கையிலெடுத்தார். அவர் ஏற்கனவே AIS-இன் மென்பொருள் குறியீடுகள் வேறு நாடுகளுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டு விட்டதாகவும் அதனால் அது வேறு யார் கைகளுக்குப் போவதையோ அல்லது MAI வேறு நாட்டிலிருந்து இயங்குவதையோ யாரும் தடுக்க முடியாது எனவும் கூறினார். தன்னுடைய பக்கம் வலுவிழந்ததைக் கண்டு அதிர்ந்த தாம்சன் வேறு விதமான யுக்தியைக் கையாண்டான். அமெரிக்க அரசாங்கக் கம்பெனியோடு இணைந்து கொள்ளும் படியும், அக்கம்பெனியின் பின்னணியிலிருந்து MAI செயல் படுவது இருவருக்கும் இணக்கமான முடிவாக இருக்கும் எனவும் தாழ்ந்த குரலில் கூறினான். அதைக் கேட்டவுடன் தாம்சன் உள்ளொன்று வைத்து வெளியில் நாடகமாடுவது டேனுக்குப் புரிந்து விட்டது. அவர் **“MAI தங்களுடைய கம்பெனி. அதை விற்பதையோ, அடுத்தவர்களோடு இணைந்து செயல்படுவதையோ தாங்கள் விரும்பவில்லை. இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை”** எனக் கூறிவிட்டு மற்ற பார்ட்னர்களுக்குக் கிளம்புவதற்கு சைகை விடுத்தார். அதைக் கேட்டவுடன் ஆத்திரமடைந்த தாம்சன் "எனக்குத் தெரியும், **அந்த புத்தகம்** உங்களிடம்தான் இருக்கிறதென்று!" எனக் கத்தினான். அந்த நொடியின் ஆபத்தை முழுவதும் உணர்ந்த பார்ட்னர்கள் மேற்கொண்டு ஏதும் பேசாமல் அமைதியாக அந்த அறையிலிருந்து வெளியேறினார்கள். விமான நிலையத்தை அடையும் வரை யாரும் எதுவும் பேசவில்லை.

தற்போது தாம்சனிடமிருந்து தப்பித்து வந்தது தாற்காலிகமானதெனவும், அரசாங்கத்தின் அச்சுறுத்தல் எப்போதும் அவர்களுக்கு இருக்கும் எனவும் உணர்ந்தனர். தங்களை உலகுக்கு வெளிக்காட்டுவதுதான் அவர்களுக்குப் பாதுகாப்பு என உணர்ந்த டேன், தங்களின் அமெரிக்க அரசாங்க சந்திப்பு நிகழ்ச்சியை ஊடகங்களுக்குத் தெரிவிப்பது மற்றும் ஐ.நா சபையில் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்து AIS-ஆல் உலகளாவிய பிரச்சனைகளுக்கு இலவசமான ஆலோசனை, தீர்வு வழங்க முடியும் என்று அறிவிப்பது ஒரு நல்ல வழி எனத் தெரிவித்தார். ரேயின் குடும்ப நண்பர் மற்றும் MAI-க்கு கடன் கொடுத்து உதவிய பில் (Bill), ரே கேட்டுக்கொண்டதின் பேரில் அவர்களுக்கு அந்த உதவிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்தார். மறுநாள் பல ஊடகங்கள் அந்தச் சந்திப்பு

பற்றிய தகவலை விரிவாக வெளியிட்டிருந்தன. மேலும் MAI, ஐ.நா. உயர் அதிகாரிகளுடன் ஏற்பாடு செய்திருந்த அந்த பேச்சுவார்த்தை இனிதே நிறைவேறியது. இடைப்பட்ட குறுகிய காலத்தில் திட்டமிட்டபடி அனைத்தும் நடந்தேற, MAI பார்ட்னர்கள் நிம்மதியுடன் பெர்க்லி திரும்பினார்கள். சிறிது நாட்களில், தாம்சனின் உயர் அதிகாரியான எட்வர் ஹாவர்ட் (Edward Howard) MAI-ஐ தொடர்பு கொண்டு அவர்களை உடனடியாகச் சந்திக்க விரும்புவதாக வந்த தகவல் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இதற்கிடையில், டேன் ரேயின் வீட்டிற்கு ஒருநாள் சென்றிருந்த பொழுது அங்கே அவர்களின் குடும்ப நண்பர் பில்-ஐச் சந்தித்தார். தக்க சமயத்தில் MAI-க்கு உதவிய அனைத்து நிகழ்ச்சிகளையும் நினைவு கூர்ந்து அவருக்கு நன்றி தெரிவித்தார். மேலும் அவர் பில்-ஐ MAI-இல் ஓர் அங்கத்தினர் ஆக்குவதற்கு பெரிதும் விரும்பினார். அவருடைய வருகை அனைத்து பார்ட்னர்களுக்கிடையில் உள்ள உறவை பெரிதும் மேம்படுத்தும் என டேன் எண்ணினார். MAI-இன் அனைத்து விபரங்களையும் கேட்டறிந்த பில் அவர்கள் ஒரு சிறந்த திருப்புமுனையை அடையவிருப்பதாக எண்ணினார். மேலும் அவர்களைக் கணினித் துறையில் உள்ள நிபுணர்களை அணுகி அனைத்து விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அதிகப்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

அதற்கடுத்த வாரம், டேனும், பில்லும் அமெரிக்க அதிகாரி ஹாவர்டைச் சந்தித்தனர். ஹாவர்ட் உண்மையானவராகவும், தாம்சனைவிட முற்றிலும் மாறுபட்டவராகவும் விளங்கினார். அவர் இதுவரை தாம்சனுடன் முறையில்லாது நடந்த சந்திப்புகளுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். மேலும் **அந்த புத்தகத்தை** பற்றியும் அவருக்கு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. அவர் ஈராக்கில் அணு ஆயுதங்களைப் பற்றி NIE (National Intelligence Estimate) - இன் தவறான கணிப்பையும் அதனால் நடந்த வளைகுடாப் போரையும் வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டார். அதனால் உலக நிகழ்வுகளை சரியான முறையில் கணித்துச் சொல்வதற்காக AIS போன்ற ஒரு மென்பொருள் தேவை என்பதற்காகவே இதுவரை அரசாங்கம் அவர்களை அணுகியதாகத் தெரிவித்தார். இருப்பினும் அது மரியாதை நிமித்தமான சந்திப்பானதால் அச்சந்திப்பில் குறிப்பிட்ட வேலை எதுவும் MAI-க்கு வழங்கப்படவில்லை. அவர்களுக்கிடையே நடந்த அந்த

உரையாடல்களையும், முன்பைப் போலவே லெவின் சுவரின் மறுபுறத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

MAI பார்ட்னர்கள் பில்லின் பரிந்துரைப்படி ஆக்ஸ்போர்டு பாதுகாப்பு கம்பெனியைத் தொடர்பு கொண்டு அனைத்து விதமான முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் பின்னர் பில் MAI-இன் அனைத்து விதமான புராஜெக்ட், அறிக்கைகள், அவற்றிற்கு வந்த கருத்துக்கள், கண்டனங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார். MAI அறிக்கைகளின் தரத்தையும், துல்லியத்தையும் கண்டு வியந்த பில், அதனால் தான் அரசாங்கம் அதை வாங்குவதற்கு இத்தனை அக்கறை காட்டுகிறது என்பதை உணர்ந்து கொண்டார். மேலும் அமெரிக்க அரசாங்கம் மட்டுமல்ல, பல அடிப்படைவாதக் குழுக்களும் MAI-இன் வளர்ச்சியை விரும்பவில்லை என்பதை அதற்கு வந்த கண்டனங்கள் எடுத்துக்கூறின. அதன் பின்னர் அவர் அனைத்து ஊழியர்களையும் நேர்காணல் செய்தார், அதில் டோனி பிரஸ்டன் மட்டும் உண்மையானவன் அல்ல என்று அவர் உள்மனது கூறியது. அது வெகு சீக்கிரம் உண்மையாகும் என கனவிலும் அவர் நினைக்கவில்லை. அவர் தனது கண்டுபிடிப்புகளை பார்ட்னர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில், டோனி பிரஸ்டன் திடீரென கம்பெனியை விட்டு நின்றுவிட்டதாகவும், மேலும் ஆன்யாவின் கம்ப்யூட்டர் பாகங்கள், ஆவணங்கள் அனைத்தும் காணாமல் போய்விட்டதாகவும் வெளியான தகவல்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்நிலையில் டேன் பில்-ஐ MAI-இன் COO (Chief Operaing Officer)-ஆக பதவி வகிக்கும் படி கேட்டுக் கொண்டார். பில் அவரது சட்ட நிறுவனத்தை விற்று, தனது முழு சேமிப்பைப் பற்றி பெரிதாக எண்ணாமல் MAI-இன் ஓர் அங்கமாக இணைந்தார். இதுவரையில் AIS நன்றாக வளர்ச்சியுற்ற போதிலும், தாங்கள் ஆய்வு செய்த பல சாதனைகள் அனைத்திலும் முக்கியமான ஒன்றிரண்டு நபர்கள் அதை வழி நடத்திச் சென்றுள்ளதைக் கண்ட அவர்கள் அந்தக் காரணி இல்லாததால் தங்கள் மென்பொருள் இன்னும் முழுமையடையவில்லை என்பதை உணர்ந்திருந்தனர். **அந்த புத்தகம்** தனிநபர்களைப் பற்றியும், அவர்களுக்கும் பொதுநபர்களுக்கும் உள்ள தொடர்பைப்

பற்றியும் டேனுக்கு விரிவாக விளக்கிக் கூறியது. அதனடிப்படையில் **மனிதர்களின் தனித்தன்மையையும், அடிப்படைக் குணங்களையும்** முக்கிய காரணிகளாக வைத்து AIS[7]-ஐ உருவாக்குவதற்கு அவர்கள் தயாராயினர். அந்த நேரத்தில் அவர்கள் படிக்க ஆரம்பித்த ஜேன் ஆஸ்டினின் "கர்வமும் தவறான அபிப்பிராயமும்" (Pride & Prejudice) என்னும் நாவல் வெவ்வேறு மனநிலைகளைக் கொண்ட மனிதர்களைப் பற்றியும், வெவ்வேறான அடுக்குகளில் அவை அமைந்திருப்பதைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துக்கூறியது, AIS[7]-க்கு இன்றியமையாத கருத்துக்களாக அமைந்தன.

அவர்கள் மனித குணங்களைப் புரிந்து கொண்டு, AIS[7]-ஐ முழுவதும் உருவாக்குவதற்கு முன்னரே வாழ்க்கை அதன் பயன்பாட்டிற்கான வாய்ப்பை வழங்கியது. அவர்களுக்கு 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஹாவர்டிடமிருந்து திடீரென ஓர் அழைப்பு வந்தது. வட கொரியா ஓர் அணுசக்தி சோதனைக்குத் திட்டமிட்டு வருவதாகவும், எனினும் அமெரிக்க அரசாங்கத்திற்கு அவர்களுடைய நோக்கம் சரியாகப் புரியவில்லை என்பதையும் தெரிவித்தார். குறிப்பாக மற்றொரு தவறான கணிப்பையும், அதனால் ஈராக் போர் போன்ற நிகழ்வுகளையும் அவர்கள் விரும்பவில்லை என்பதனைத் தெரிவித்தார். ஆகையினால் வட கொரியாவின் நோக்கம், குறிப்பாக வடகொரியத் தலைவரான **"கிம்"** மனதில் என்ன இருக்கிறது என்பதனைப் பற்றிய AIS முடிவுகளை உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதுவரை AIS-இன் கணிப்புகள் பொதுவான உலகளாவிய பிரச்சனைகள் சார்ந்தவை; இப்பொழுது தேவைப்படுவது குறிப்பான மற்றும் மனித சுபாவம் சம்பந்தமான கணிப்பு. அத்தகைய AIS மென்பொருள் தற்பொழுதுதான் உருவாக்கப்பட்டுக்கொண்டிருப்பதாகவும், அவர்களால் முடிந்த அளவு முயற்சி எடுப்பதாகவும் டேன் உறுதி கூறினார்.

AIS[7] மென்பொருளின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு **அந்த புத்தகமும்**, *Archives* கட்டுரைகளும் பெருமளவு உதவின. அவற்றில் மனித சுபாவம், குணநலன்கள் மிகவும் சிக்கலான அமைப்பு என்றும், அதைப் புரிந்து கொள்வதற்காக ஆறு பரிணாம வடிவமைப்பு மூலம் விளக்கி அக்கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

**D1: வளர்ச்சி வடிவம் -- பழக்க வழக்கங்கள் - நடத்தை- குணாதிசயம் - ஆளுமை- தனித்தன்மை**

**D2: திசை, (நோக்கம்) --நேர்மறை, எதிர்மறை காரணிகள்**

**D3: ஆர்வம் -- சக்தி, உறுதி சம்பந்தமானது**

**D4: பண்புகள் -- உயர்ந்த குணநலன்கள், நேர்த்தி சம்பந்தமானது**

**D5: வலிமை -- ஆளுமைத்திறன் சம்பந்தமானது**

**D6: ஜீவியம் -- ஒன்பது நிலைகளிலான ஜீவியம்**

அந்த நேரத்தில் முதல் ஐந்து நிலைகளையும் ஓரளவு புரிந்து $AIS^7$ மென்பொருளில் அவர்களால் சேர்க்க முடிந்தது. ஆறாம் நிலையான ஜீவியத்தின் ஒன்பது நிலைகள் புரிவதற்கு மிகவும் கடினமாக இருந்ததால் அவர்கள் அதை மட்டும் விட்டுவிட்டு பின்னர் வரும் நாட்களில் அதை சேர்த்துக்கொள்ளலாம் என முடிவு செய்தனர்.

அவர்கள் அதற்காக இரவு பகலாக உழைத்துக்கொண்டிருந்த வேளையில், மீண்டும் ஹாவர்ட் தொடர்பு கொண்டு அவர்களை இன்னும் ஒரே வாரத்தில் அறிக்கையை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். 2006-ஆம் ஆண்டு அக்டோபர் 02-ஆம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசாங்க கூட்டத்தில் அவர்கள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். விமானப் பயணத்தின் போது தான் டேனுக்கும், ரேவிற்கும் AIS அறிக்கைகளைப் படிக்க நேரம் கிடைத்தது. அவர்கள் $AIS^{6b}$ மற்றும் $AIS^7$ அறிக்கைகள் பல இடங்களில் ஒரே மாதிரி முடிவை வெளியிட்டருந்தன எனவும், மேலும் ஒரு சில இடங்களில் அவை ஒன்றுக்கொன்று மிகவும் முரண்பட்டிருப்பதையும் கண்டனர். அவர்கள் அக்கூட்டத்தில் நுழையும் பொழுது டோனி பிரஸ்டன், இஸ்ரேல் நாட்டு பிரதிநிதியுடன் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டனர்.

பனிரெண்டு விதமான அறிக்கைகள் அந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. பல அறிக்கைகள் அமெரிக்க அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்குமாறும், பல அறிக்கைகள் வேண்டாமென்றும் இருதரப்பட்ட முடிவுகளாக இருந்தன. இஸ்ரேல் நாட்டு அறிக்கையை வாசிக்கும் பொழுது அவை பல இடங்களில் AIS$^{6b}$ உடன் ஒத்துப்போவதைக் கண்ட ரேவிற்கு யார் ஆன்யாவின் கணினி மற்றும் ஆவணங்களைத் திருடியது என்பது தெளிவாக விளங்கியது. கடைசியாக MAI-இன் வாய்ப்பு. ரே அந்த அறிக்கையை வாசித்தார். அவருடைய அறிக்கை அனைத்து விதமான காரணங்களையும் துல்லியமாக எடுத்துக்கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. AIS$^{7}$ அறிக்கையின் படி, **வடகொரியா அரசாங்கத்தின் முதன்மையான எண்ணம் தொடர்ந்து ஜீவிப்பதேயன்றி, போர் தொடுப்பது அல்ல.** மேலும் அந்த அறிக்கை, **வடகொரியா தங்கள் திறமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம் அணுகுண்டு சோதனையை நடத்தும் என்றும், மற்றவர்கள் அவர்களைத் தாக்கினாலொழிய போர் நடவடிக்கையில் அவர்கள் இறங்க மாட்டார்கள்** எனவும் விளக்கியது. மேலும் அது, **இரு கொரிய நாடுகளும் வெளிநாட்டு தலையீடு ஏதும் இல்லாமல் அவர்களாகவே இணைந்து விடுவார்கள்** என முன்னுரைத்தது. மேலும் AIS$^{7}$ கணித்துக் கூறிய பல்வேறு பரிந்துரைகளை எடுத்துக்கூறி அவர் தன்னுடைய அறிக்கையை நிறைவு செய்தார். அதன் பின்னர் அந்த அறிக்கையின் மீது நடந்த கார சார விவாதத்தின் பொழுது அனைத்து கேள்விகளையும் எதிர் கொண்டு ரே அழகாகப் பதிலளித்தார். இறுதியில் அந்த அறிக்கை மிகவும் வரவேற்கப்பட்டது. குறிப்பாக அந்தச் சந்திப்பில் இடம் பெற்ற அமெரிக்கத் தூதரான போல்டனின் பிரதிநிதி, கொரிய வல்லுநர், அந்த அறிக்கையை முழுவதும் ஏற்றுக்கொண்டார்.

மூன்று நாட்களுக்குப் பின்னர், 2006 அக்டோபர் 05-ஆம் நாள் வட கொரியா நிலத்தடி அணு சோதனை ஒன்றை நடத்தியது. எனினும் அமெரிக்கா ஏதும் பதில் நடவடிக்கை எடுக்கவில்லை. நான்கு வாரங்களுக்குப் பிறகு, ஹாவர்டிடமிருந்து MAI-க்கு ஒரு செய்தி வந்தது. அதில் AIS$^{7}$ இன் துல்லியமான கணிப்பைப் பாராட்டி எழுதியிருந்த அவர், MAI-ஆல் மீண்டும் ஒரு முட்டாள்தனமான நடவடிக்கையிலிருந்து தப்பி விட்டதாக

எழுதி இருந்தார். மேலும் அவர்கள் வேலைக்குச் சன்மானமாக 2 மில்லியன் டாலர்கள் காசோலையையும் அத்துடன் இணைத்திருந்தார்.

***

# பகுதி 4: வாழ்வு

ஒரு நாள் சனிக்கிழமை காலை, வினய் தனது நண்பர்களுடன் கால்பந்து விளையாடுவதற்காக மும்முரமாக கிளம்பிக்கொண்டிருந்தார். விடுமுறை நாளானதால், அவர் வீட்டு வேலைகளில் தனக்கு உதவியாக இருப்பார் என்று நம்பிக்கையுடன் இருந்த ஆன்யாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சிறிது நேரம் கழித்து வினய் திடீரென்று கடுமையான வயிற்று வலியுடன் வீட்டிற்குத் திரும்பி வந்தார். ஆன்யா உடனடியாக அவரை மருத்துவமனையில் சேர்க்க, அங்கு அவருக்கு கணையத்தில் அவசர அறுவை சிகிச்சை நடந்தது. தக்க சமயத்தில் அவரைக் கொண்டு வந்ததற்காக மருத்துவர்கள் ஆன்யாவைப் பாராட்டினர். இருப்பினும் ஆன்யாவுக்கு தன்னுடைய கோபம் தான் அவரைப் பாதித்து விட்டதோ என்று ஒரு மனக்கலக்கம் இருந்தது. அந்தப் பிரச்சினையின் மூலம் ஒரு நேர்மறை அம்சமாக, வினய்க்கு ஆன்யாவின் குழந்தையான கேட்டியாவோடு (Katia) நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் இருவரும் சேர்ந்து ஆன்யாவை விளையாட்டாகக் கேலி செய்யும் அளவிற்கு அவர்கள் நட்பு பலப்பட்டது.

இவ்வாறு வினய்க்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் போவதற்கு முன்பு ஒரு நாள், ஆன்யாவின் தோழி வேணா அவளைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, ஒரு வார விடுமுறைக்காக ஹவாயியில் இருக்கும் தன்னுடைய பெற்றோர்களின் விருந்தினர் இல்லத்திற்கு அவர்களை அழைத்திருந்தாள். ஆன்யா தொலைபேசியை வைத்தவுடன் அவளுடைய கணினியின் "ஹார்ட் டிரைவ்" திடீரென செயலிழந்து விட்டதால் அவளுக்கு வேறு ஒரு முறை மூலம் தன்னுடைய புராஜெக்ட் தகவல்களைச் சேமித்து வைக்க வேண்டியிருந்தது. அத்தோடு வினய்க்கும் திடீரென உடல்நிலை சரியில்லாததால், அவர்களால் பயணத்திற்கு திட்டமிட்ட நாளன்று போக இயலவில்லை. அதன் பின்னர் ஒரு வாரம் கழித்து, வேணா மீண்டும் தொடர்புகொண்டு கூறிய தகவல் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏனெனில், அவர்கள் ஏற்கனவே பயணத்திற்கு திட்டமிட்டிருந்த நாளன்று ஹவாயியை ஒரு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது தெரிய வந்தது. அந்தச் செய்தி ஆன்யாவை ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவள் உடனே டேனிடம்

தொடர்பு கொண்டு, அவர்கள் அதிர்ஷ்டவசமாகத் தான் உயிர் தப்பினார்களா என வினவினாள். ஏனெனில், தற்செயலாய் நடந்த வினய்யின் உடல்நலமின்மை மற்றும் ஹார்ட் டிரைவ் செயலிழந்தது போன்ற எதிர்பாரா நிகழ்வுகளால் மட்டும் அவர்கள் ஆபத்திலிருந்து தப்பித்து இருப்பதை அவளால் ஜீரணிக்க இயலவில்லை.

இதற்கிடையில், வடகொரிய பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கத்தின் சந்திப்பினை முடித்துவிட்டு, டேனும், ரேயும் பெர்க்லிக்கு திரும்பி வந்தனர். அங்கு தனது வீட்டில் இஸ்ரேல் உளவுத்துறை அதிகாரி கர்ட் லெவின் அமர்ந்திருப்பதைக் கண்ட டேனுக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. மிகவும் மன்னிப்பு கேட்கும் தொனியில் பேசிய லெவின், தான் சமாதான நோக்கத்தோடு வந்திருப்பதாகக் கூறி, ஆன்யாவின் அனைத்து ஹார்ட் டிரைவ் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பித்தார். மேலும் AIS[7]-யின் துல்லியமான முடிவுகளுக்கும், அதன் மூலம் அவர்கள் நல்ல முறையில் அமெரிக்க அரசாங்கத்தை வழிநடத்தியதற்காகவும் தனது பாராட்டுதல்களையும், மகிழ்ச்சியினையும் தெரிவித்தார். பின்னர் அவர், MAI உடன் தொடர்பு கொள்வதற்காக தாம்சன் மற்றும் ஹாவர்ட் மூலம் தான் செயல்பட்டது தவறு என்று ஒப்புக் கொண்டதோடு, அதைச் சரி செய்யும் பொருட்டே நேரில் உண்மையை விளக்க வந்திருப்பதாகக் கூறினார். மேலும் அவர் அங்கு வந்ததற்குக் காரணம் மத்திய கிழக்கு பிரச்சினைக்கு AIS மூலம் தீர்வு ஏற்படும் என தான் நம்புவதாகக் கூறினார்.

அதன் பின்னர் பார்ட்னர்கள் கலந்து கொண்டு விவாதித்தனர். அமெரிக்க அரசாங்கத்தைச் சந்தித்த பின்னரும், லெவினின் வருகைக்குப் பின்னரும் அவர்கள் கலந்துரையாடிய நீண்ட சந்திப்பு அது. இதற்கு முன்னதாகவே ஆன்யா, AI மாநாட்டில் தொடங்கி, சமீபத்திய ஹவாய் பூகம்பம் வரை தங்கள் வாழ்வில் நடந்த தற்செயல் போன்ற நிகழ்ச்சிகளைப் பட்டியலிட்டு வைத்திருந்தாள். பார்ட்னர்கள் அதை ஆராய்ந்த பொழுது அனைத்துமே தற்செயலாக நடந்த நிகழ்ச்சிகளாகத் தோன்றியது. எனவே “தற்செயல்” என்பது வாழ்வில் பெரும்பங்கு வகிக்கும் நேரத்தில் அவர்களால் எப்படி மனிதர்கள் வாழ்வில் சாதிப்பதற்காக ஒரு மென்பொருளைத் தயாரிக்க முடியும் என்பது புதிராக

இருந்தது. அதன் பின்னர் டேன் **அந்த புத்தகம்** அத்தகைய கேள்விகளுக்கு எவ்வாறு விடையளிக்கிறது என்பதைப் பகிர்ந்து கொண்டார். **“மனிதர்களைப் போலவே வாழ்வும் ஒரு கதாபாத்திரமாகச் செயல்படுகிறது. அதுவும் மனிதர்களைப் போலவே பரிணாம வளர்ச்சி அடைகிறது. எனவே, தற்செயல் நிகழ்வு போன்ற அனைத்திற்குப் பின்னாலும் ஒரு சரியான காரணமும், நோக்கமும் இருக்கிறது”** எனத் தெரிவித்தார். அதன்படிப் பார்த்தால் AIS[7]–ஐ விரைவு படுத்துவதற்காக வாழ்வு வட கொரிய பிரச்சினை தொடர்பான நிகழ்ச்சியைக் கொடுத்ததாகவும், மேலும் அதை அடுத்த நிலைக்கு AIS[8] கொண்டு செல்வதற்காக தற்பொழுது மத்திய கிழக்கு பிரச்சனையைக் கொடுத்துள்ளது எனக் கூறி லெவினைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் அவர்களுக்குத் தெரிவித்தார்.

லெவின் அடுத்த நாள் MAI-க்கு வந்து பார்ட்னர்களைச் சந்தித்து, பாலஸ்தீன பிரச்சினையைப் பற்றி விரிவாக விளக்கினார். மேலும் அவர் MAI- ஐ தொடர்பு கொள்ள விரும்பியதற்குக் காரணம் **“அந்த புத்தகமே”** எனவும், அவர் **அந்த புத்தகத்தை** ஏற்கெனவே பார்த்திருக்கிறார் எனவும் கூறி அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். அதன் பின்னர் **அந்த புத்தகம்** தன்னுடைய வாழ்வில் எவ்வாறு செயல்பட்டது என்பதனை விளக்கினார். 1989-ஆம் ஆண்டு பெர்லினில் ஒரு ஞாயிறு சந்தையில் அவருக்கு **அந்த புத்தகத்தை** பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. எனினும் அதன் பின்னர் நடந்த பல நிகழ்ச்சிகளால் அவர் **அந்த புத்தகத்தை** வாங்குவதற்கான வாய்ப்பைத் தவற விட்டு விட்டார். அதன் பின்னர் அவர் எவ்வளவு தேடியும் அவரால் **அந்த புத்தகத்தை** கண்டு பிடிக்க முடியவில்லை.

சில வருடங்களுக்கு முன்பு அவர் MAI-இன் NASA புராஜெக்ட் பற்றிய அறிக்கையைப் படிக்க வாய்ப்பு கிடைத்த பொழுது, அதில் தான் அப்புத்தகத்தில் கண்ட வாசகங்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். அதன் பின்னர் அமெரிக்க அரசாங்கத்தின் மூலம் அவர் MAI - ஐ இரகசியமாகக் கண்காணிக்க ஆரம்பித்து, அவர்களிடம் தான் அப்புத்தகம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். அதன் பின்னர் அவர் தாம்சனுடன் சேர்ந்து செய்த அனைத்து முயற்சிகளும் தவறானவையே என ஒப்புக்கொண்டு அதற்காக மன்னிப்பு கேட்பதற்காகவே அவர்

திரும்பவும் MAI-க்கு வந்துள்ளார் எனத் தெரிவித்தார். மேலும் அவர், தனது ஆராய்ச்சியின் படி அமெரிக்க அரசாங்கம் மட்டுமல்லாது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட பல்வேறு குழுக்கள் **அந்த புத்தகத்தை** அடைவதற்குத் தீவிர ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். பின்னர் டேன் **அந்த புத்தகத்தை** அவருக்குப் பார்க்கக் கொடுத்த பொழுது, தாயைப் பிரிந்த சேய் மீண்டும் கண்டு மகிழ்ச்சி அடைந்ததைப் போல் **அந்த புத்தகத்தை** பார்த்து அவர் பரவசப்பட்டார். மேலும் **அந்த புத்தகத்தை** MAI-இல் பத்திரமாக ஓரிடத்தில் வைத்து பாதுகாக்க வேண்டும் என அறிவுறுத்தினார். அத்தோடு அவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் இரட்டிப்பாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அடுத்த வந்த பல நாட்களுக்கு பார்ட்னர்கள் வாழ்க்கை, கர்மம் போன்ற பல விஷயங்களை ஆராய்ந்து, அவற்றிலிருந்து $AIS^8$-க்கு ஆதாரமான **வாழ்வின் மறுமொழிச் சட்டங்கள்** பலவற்றைக் கண்டறிந்தனர். அவற்றிலிருந்து மேன்மேலும் பல புதிய கேள்விகள் முளைத்தன. ஒவ்வொரு சட்டமும் வாழ்வின் மற்ற பல சட்டங்களோடு தொடர்பு கொண்டுள்ளதால் அவற்றை $AIS^8$ -இன் மென்பொருளுக்கேற்ற காரணிகள் என எடுத்து வரிசைப்படுத்தினால் அது ஒரு மில்லியனைத் தாண்டும் என ஆன்யா தெரிவித்தாள். அத்தகைய சிரமத்தை அனைவரும் உணர்ந்திருந்தாலும், லெவின் இதுவரை அவர்கள் பயன்படுத்திய முறை மிகவும் பாராட்டத்தக்கது என விளக்கினார். அதாவது **அந்த புத்தகத்தில்** உள்ள ஓர் அறிவார்ந்த கருத்தை எடுத்துக்கொண்டு, அதை வரலாறு, சுயசரிதை, வணிகம், இலக்கியம் போன்ற பல்வேறு துறையின் அனுபவத்தோடு பொருத்திப்பார்ப்பது. அதனால் வாழ்வின் பல்வேறு துறைகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளை எடுத்துக்கொண்டு அதை **அந்த புத்தகத்தின்** நூறு முக்கியமான உண்மையுடன் பொருத்திப்பார்க்கும் பொழுது $AIS^8$-க்குத் தேவையான காரணிகள் அவர்களுக்குக் கிடைக்கும் என அவர் தெரிவித்தார். மேலும் பல்வேறு பல்கலைக் கழகங்களைத் தொடர்பு கொண்டு அத்தகைய ஆய்வுப்பொருளை விளக்கி, அவர்களின் ஆராய்ச்சியின் மூலமும் $AIS^8$-க்குத் தேவையான பல காரணிகளை அவர்கள் கண்டறியலாம் எனவும் ஊக்கப்படுத்தினார்.

அவர்களின் அத்தகைய தீவிர முயற்சி, அதன் தொடர்பான வெளிப்புற வாய்ப்பை உடனடியாக ஈர்த்தது. அது தென்கொரிய நாட்டைச் சேர்ந்த பல மில்லியன் டாலரில் வர்த்தகம் செய்யும் பென் சோய் (Ben Choi) நிறுவனத்துடனான தொடர்பு! அந்த வாய்ப்பு லெவின் மூலம் வந்தது. அடுத்த வந்த நாட்களில் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் MAI பார்ட்னர்களைச் சந்தித்து, அவர்களைப் பாராட்டியதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் விரும்பினர். மேலும் அவர்கள் AIS[8]-இன் மேம்பாட்டிற்காக நிதியுதவி செய்யவும், அது சம்பந்தமான மேலும் பல தொடர்புகளை ஏற்பாடு செய்யவும் உறுதியளித்தனர். அவர்களின் MAI முதலீட்டு வாய்ப்புக்கு, பார்ட்னர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாகப் பத்து மடங்கு இலாபம் காண முடியும் என அவர்களுக்கு நம்பிக்கை அளித்தனர். அதற்கடுத்த வாரத்தில் MAI மற்றும் சோய் குழுவிற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதால் விஷயங்கள் மிக வேகமாக வளர்ந்தன.

இந்நிலையில் பில்லின் (Bill) குடும்பத் தொழிலோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு ஏற்கனவே கடன் கொடுத்து உதவிய, Frankfurt-ஐச் சேர்ந்த ரோல்ப் ஓப்பன்ஹாவர் (Rolf Oppenhauer) MAI-இல் முதலீடு செய்ய விரும்பினான். பலகட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, ஓப்பன்ஹாவர் கம்பெனி எட்டு பில்லியன் டாலருக்கு MAI-இல் முதலீடு செய்ய முன் வந்தது. அதில் இரண்டு பில்லியன் டாலர்கள் மார்க்கெட்டிங் உரிமங்களுக்காகவும், அடுத்த இரண்டு பில்லியன் டாலர்கள் 33% MAI பங்குகளுக்காகவும், மேலும் நான்கு பில்லியன் டாலர்கள் MAI கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டும் எனவும் ஒப்பந்தம் போடப்பட்டது. அனைத்து முதலீட்டுத் திட்டங்களும் உறுதியான பின்னர் MAI-இன் நிதி நிலவரத் திட்டத்தை பில் அறிவித்தார். அதன் படி, MAI பார்ட்னர்கள் 51% பங்குகளும், ஓப்பன்ஹாவர் 33% பங்குகளும், மீதமுள்ள பங்குகள் MAI ஊழியர்களுக்கு விற்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது. அனைத்து ஒப்பந்தங்களும் 2006-ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில் கையெழுத்தாக, முதல் தவணைத் தொகை டிசம்பர் 5-ஆம் நாள் வந்தது. இந்நிலையில் லெவினும் Mossad-இல் இருந்து ஆறு மாத கால விடுமுறை எடுத்துக் கொண்டு MAI-இல் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்தார்.

MAI-இன் முதலீட்டு திட்டம், ஊழியர்களுக்கான பங்குத்திட்டம் போன்ற முக்கிய செய்திகளை பார்ட்னர்கள் இரகசியமாக வைத்திருந்தாலும், எப்படியோ ஊழியர்களுக்குப் பரவி அதைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்ட விஷயம் பார்ட்னர்களின் காதுகளுக்கு எட்டியது. அதன் பின்னர் அவர்கள் மேற்கொண்ட விசாரணையில், அவற்றிற்குக் காரணம் ரேயின் மனைவி ராணா எனத் தெரிய வந்தது. ராணா தன்னுடன் வேலை பார்க்கும் கந்தர் ஹென்மன் (Gunther Henmann) என்பவனிடம் தன்னையறியாமல் MAI பற்றிய விஷயங்களைப் பகிர்ந்து கொண்டதே அதற்குக் காரணம். MAI-க்கு ஏற்படும் விளைவுகளை அறியாமல், அவனின் கவர்ச்சியான வார்த்தைகளுக்குப் பலியாகி அவள் கூறிய விஷயங்கள் MAI-க்கு பெரிதும் பாதிப்பாக அமைந்தன. மேலும் விசாரணையில், ஹென்மன், ஓப்பன்ஹாவரால் அனுப்பப்பட்ட ஆள் என்பதும் தெரிய வந்தது.

பில்லின் குடும்பத் தொழிலுக்கு கொடுத்த கடனுக்கு ஈடாக MAI-இன் பங்குகளை விற்குமாறு ஓப்பன்ஹாவர் பில்லுக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தான். பில் மூலமும், ராணா மூலமும், மேலும் சில MAI பணியாளர்கள் மூலமும் அதிகப்படியான பங்குகளை வாங்குவதன் மூலம் MAI-ஐ தந்திரமாக அவன் ஆக்கிரமத்துக்கொள்ள முயலும் சூழ்ச்சி புலப்பட்டது. டேன் **அந்த புத்தகத்தை** ஆராய்ந்த பொழுது, அது வித்தியாசமாக **"பரநலம்"** என்னும் கருத்தை அந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக உணர்த்தியது. ஒரு குடும்ப நண்பர் என்ற முறையில் பில், ராணாவுடன் பேசுவதாக உறுதியளித்தார். இருப்பினும் டேன், ஹென்மனின் முழு நோக்கத்தை அறிந்து கொள்வதற்காகக் கவனத்துடன் பதிலளிக்கும்படிக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் AIS[7]-இன் குறியீடுகளை, MAI பொது மக்களுக்கு இலவசமாக வழங்கத் திட்டமிட்டுள்ளது என்பதனைத் தெரியப்படுத்துமாறு கூறினார். அதன் மூலம் மேலும் அவன் பங்குகளைப் பெறுவதை தாமதப்படுத்துவான் என்பது அவர்களது எண்ணம். திட்டமிட்டபடி விஷயங்கள் அனைத்தும் நடந்தன.

இந்நிலையில் டேன் தான் வசிக்கும் வீட்டை விட்டு MAI வளாகத்திற்குள் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு தனி மடம் போன்ற இடத்தில் குடியேறினார். அந்த இடம் ஆன்யாவால்

வடிவமைக்கப்பட்டு **டேனின் ஆசிரமம்** என அழைக்கப்பட்டது. அங்கு பார்ட்னர்கள் மற்றும் லிம்பியா மட்டுமே நுழைய அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து $AIS^8$ தொடர்பான வேலைகளும் முழு வீச்சில் நடந்தன. ஒருநாள் அது தொடர்பான விவாதத்தின் பொழுது, இதுவரை தாங்கள் வளர்ந்து வந்த பாதையிலிருந்து மாற வேண்டிய நேரம் என டேன் விளக்கினார். அதாவது AIS மென்பொருளை விழிப்புணர்வுடன் மாற்றுவதற்குப் பதிலாக, எப்படி அந்த மென்பொருள் மனிதனை விழிப்புணர்வு உடையவனாக மாற்றுவதற்கு உதவ வேண்டும் என விளக்கி, அது தொடர்பாக எப்படி $AIS^8$-ஐ மாற்ற வேண்டும் எனவும் விவரித்தார். அது தொடர்பான விவாதங்கள் பல நாட்கள் தொடர்ந்து நடந்தன.

2007-ஆம் ஆண்டு ஜனவரி 2-ஆம் நாள் பில், ஒப்பன்ஹாவரிடம் MAI-க்கு இனிமேலும் அவனது பண உதவி தேவையில்லை என அறிவித்தார். மேலும் $AIS^7$ மென்பொருளை இலவசமாகக் கொடுப்பது தொடர்பான மார்க்கெட்டிங் மாற்றத்தை அவனிடம் தெரியப்படுத்தியது அவனது கோபத்தைப் பன்மடங்கு அதிகரித்தது. அவனது கோபத்தின் விளைவு அவர்கள் நினைத்ததைக் காட்டிலும் வேகமாக அவர்களை வந்தடைந்தது. ஒருநாள் எந்தவித முன்னறிவிப்புமின்றி FBI அதிகாரிகள் திடீரென MAI அலுவலத்திற்குள் நுழைந்து தேடுவதற்கான வாரண்ட் அறிக்கையுடன் வந்து சோதனை நடத்தினர். பார்ட்னர்கள் தங்களுக்குள் கலந்து பேசி எப்படித் தயாராவது என்பதற்குக் கூட கால அவகாசம் இல்லை. டேனின் ஆசிரமத்தையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. இறுதியில் பல விதமான அறிக்கைகள், கணினி ஹார்ட் டிரைவ் ஆகியவற்றைப் பறிமுதல் செய்து தங்களுடன் எடுத்துச் சென்றனர். அவர்கள் சென்ற பிறகு **அந்த புத்தகத்தை** காண வில்லை! வழக்கமாக டேன் வைக்கும் இடத்தில் இல்லை. FBI அதிகாரிகள் பறிமுதல் செய்த பட்டியலிலும் அது இல்லை.

எனினும், டேன் மிகவும் நம்பிக்கையுடன் காணப்பட்டார். **அந்த புத்தகம்** ஒரு நோக்கத்திற்காக வந்திருக்கிறது எனவும், அந்த வேலை முடியாமல் **அந்த புத்தகம்** தங்களை விட்டுச் சென்று விடாது எனவும் பார்ட்னர்களுக்கு ஆறுதலளித்தார். மறுநாள் அவரது நடைப்பயணத்தின் பொழுது அவரையறியாமல் மோஸ் புத்தகக்கடை அருகில்

வந்த டேன் **அந்த புத்தகம்** வந்ததிலிருந்து தன்னுடைய வாழ்வு எந்த அளவுக்கு மாற்றப்பட்டது என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். அன்று இரவு அவர் MAI-க்கு செல்லாமல் தன்னுடைய பழைய வீட்டிலேயே தங்கினார். அந்த இரவு நடுநிசியில் அவர் வீட்டில் நடந்த திருட்டு முயற்சியிலிருந்து, புதிதாக அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அலாரத்தாலும், லெவின் அவரைத் தேடி சரியான சமயத்தில் அங்கு வந்ததாலும் அவர் தப்பித்தார். அடுத்த நாள் இரவு MAI-க்கு அவர்களிருவரும் திரும்பினர்.

மறுநாள் காலை பழக்க தோஷத்தில் அவர் **அந்த புத்தகம்** வைத்திருக்கும் மேசை இழுப்பறையைத் திறக்க, அங்கு **அந்த புத்தகம்** அவருக்காகக் காத்திருந்தது! அவர் அடைந்த ஆனந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை. அந்த இரகசியத்திற்குக் காரணம் லிம்பியா. அன்று FBI அதிகாரிகள் சோதனை செய்ய வந்த பொழுது, மிகவும் பயந்து போன அவள் **அந்த புத்தகத்தை** எடுத்துக்கொண்டு பின்வாசல் வழியாகச் சென்று விட்டாள். டேன் அடிக்கடி **அந்த புத்தகத்தை** படிப்பதைப் பார்த்திருந்த அவளுக்கு சூட்சுமமாக அது முக்கியான ஒரு பொருள் எனத் தெரிந்திருந்தது.

அந்த FBI தேடலுக்குப் பின்னும், கெட்ட எண்ணத்தோடு கூடிய ஓப்பன்ஹாவரின் நடவடிக்கைள் தொடர்ந்தன. பில்லின் குடும்ப கடனிற்காக MAI-இன் பங்குகளை உடனடியாக விற்குமாறு அவரைக் கட்டாயப்படுத்தினான். இருப்பினும் MAI-மீது கொண்ட நல்லெண்ணம் காரணமாக அவன் கேட்டதை பில் நிராகரித்தார். அதற்கான மறுமொழி அவர் வாழ்வில் உடனே பிரதிபலித்தது.  சோய் குழு கொடுத்த பணத்தைக் கொண்டு, டேன் பில்லின் பங்குகளை வாங்குவதாக உறுதியளித்தார். அதன் மூலம் MAI, அவரது குடும்ப தொழில், கையிருப்பு பணம் ஆகிய அனைத்தும் காப்பாற்றப்பட்டன. அப்படிப்பட்ட சோதனையான காலத்திலும் MAI தொடர்ந்த வளர்ச்சி கண்டது. இரண்டு விதமான AIS மென்பொருள்கள் தயாரிக்கப்பட்டன. முன்னிருந்ததைப் போலவே கம்பெனிகளின் வளர்ச்சிக்கான மென்பொருள் AIS8 என்றும், தனி மனித முன்னேற்றத்திற்கான மென்பொருள் *Accomplish* எனவும் அழைக்கப்பட்டது. *Accomplish* இணையத்தைச் சார்ந்த ஒரு பொருள்.  அதில் பயனீட்டாளர்கள் உலகத்தின் பல்வேறு

பகுதிகளில் இருந்து இணைந்து அவர்களுடைய அனுபவங்களை, கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது மூலம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட திறமைகள் வாழ்வில் சிறக்க அது உதவியது. AIS[8] மற்றும் *Accomplish,* 2007-ஆம் ஆண்டில் விற்பனைக்கு வந்தன. ஆரம்பத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றாலும், *Accomplish*-இன் முடிவுகளில் பல தவறுகள் இருப்பதாகப் பின்னர் குற்றம் சாட்டப்பட்டது. அந்த நேரத்தில் அவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து பின்னரே பதிலளிக்க முடியும் என பார்ட்னர்கள் உணர்ந்து கொண்டனர்.

***

# பகுதி 5: ஜீவியம்

அடுத்து வந்த நாட்களில் *Accomplish*-க்கு எதிரான குற்றச்சாட்டு அதிகரித்துக் கொண்டே இருந்தது. டேன் மற்ற பார்ட்னர்களிடம் அதனால் React ஆக வேண்டாம் என்றும், கவனத்தை மற்ற விஷயங்களில் செலுத்துமாறும் அறிவுறுத்தினார். ஒரு நாள் லெவின் அப்பிரச்சினைகளுக்கு மென்பொருள் அல்லாது அதைப் பயன்படுத்துபவர்கள் காரணமாக இருக்கலாம் அல்லவா என வினவினார். அதைப் பற்றி டேன் யோசித்துக்கொண்டிருக்கும் பொழுது அவருக்கு திடீரெனத் தோன்றியது, **"ஜீவியம்!"** மனித குணநலன்களைப் பற்றி அறிவதில் ஆறாவது பரிணாமத்தை அந்நேரத்தில் அவர்கள் விட்டிருந்தனர். உடனடியாக அவர் **அந்த புத்தகத்தையும்,** *Archives*-யும் தேடிய பொழுது அவருக்கு ஜீவியத்தைப் பற்றி விவரமான விளக்கங்களும் அவர்களின் கேள்விகளுக்கு விடையும் கிடைத்தது. அதன் மூலம் *Accomplish*-இன் பிரச்சினைக்குக் காரணம் சில குறிப்பிட்ட ஜீவியத்தன்மை கொண்ட பயனீட்டாளர்கள் தான் காரணம் என்பது தெளிவாக விளங்கியது. உடனடியாக அதில் அவர்கள் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தனர்.

ஒரு நாள், MAI-இன் பாதுகாப்பு அமைப்பில் சில கோளாறுகள் ஏற்பட்டன. அவர்கள் மின்னணு மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வேறொருவர் அவர்களது பாதுகாப்பு அமைப்பில் ஊடுருவ முடியும் எனத் தெரிந்தது. தொடர்ந்து பல்வேறு பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்டும் அவர்களுக்குப் புதிது புதிதாக வந்த பகைவர்களின் தாக்குதல்கள் குழப்பதைக் கொடுத்தன. இறுதியாக அவர்கள் அந்த துறையில் உள்ள ஒரு நிபுணரைக் கலந்து ஆலோசிக்க முடிவு செய்தார்கள். அது வேறு யாருமல்ல. சில வருடங்களுக்கு முன்பு AI மாநாட்டில் கலந்து கொண்ட புரபசர் ஸ்டேன்! பின்னர் அவர்கள் அவரது இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்து தங்களது அனைத்து அனுபவங்களையும், **அந்த புத்தகத்தை** அபகரிப்பதற்காகத் தொடர்ந்து ஏற்படும் தாக்குதல்களையும் விரிவாக எடுத்துக் கூறினர். ஒரு மணி நேரம் ஆழமாக **அந்த**

**புத்தகத்தை** படித்த பின்னர், உண்மையிலேயே அது ஒரு மிகச்சிறந்த மாமனிதரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என ஸ்டேன் தெரிவித்தார்.

பின்னர் மேக்ஸ் தியானைப் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களைப் பற்றியும் எடுத்துக்கூறி, இறுதியில் அவர் **அந்த புத்தகத்தின்** ஆசிரியராக இருக்க முடியாது என அறுதியிட்டுக் கூறினார். மேலும் அவர் அதைப்போன்ற ஒரு புத்தகம் உலகின் புரட்சிகரமான நேரங்களிலெல்லாம் தன்னை வெளிக்காட்டியது என்று பல்வேறு உலக வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்து விளக்கினார். அந்த நேரத்தில் பலர் **அந்த புத்தகத்தால்** பயனடைந்திருந்தாலும் எவராலும் **அந்த புத்தகத்தை** முழுமையாகத் தங்களுக்கென உடைமையாக்கிக் கொள்ள முடியவில்லை. இருப்பினும், அன்றைய காலம் தொட்டே பல்வேறு குழுக்கள், பல்வேறு இரகசிய சங்கங்களைச் சார்ந்தவர்கள் **அந்த புத்தகத்தை** தங்கள் சொந்த இலாபத்திற்காக, நிரந்தரமாக அடையும் பொருட்டு அதைத் தேடி வருகிறார்கள். புரபசர் ஸ்டேனும் அத்தகைய ஒரு புத்தகத்தைப் பார்த்திருப்பதாகவும், பார்த்த சில நொடிகளில் ஹங்கேரிய புரட்சி வெடித்ததாகவும், தனக்கும் **அந்த புத்தகத்திற்கும்** உள்ள தொடர்பை எடுத்துக் கூறினார். அந்த கலந்துரையாடலுக்குப் பின், **அந்த புத்தகத்தை** மேலும் அறியும் பொருட்டு, ஸ்டேன் MAI-க்கு அடிக்கடி வந்து அதைப் படிப்பதற்கு அனுமதி கேட்டார். பார்ட்னர்களும் மகிழ்ச்சியுடன் அதற்கு ஒத்துக் கொண்டனர்.

அதன் பின்னர் ஸ்டேன் அடிக்கடி MAI-க்கு வந்து போகத் தொடங்கினார். அந்த காலகட்டத்தில், ஒரு பரிசோதனையின் மூலம் *Archives* மற்றும் *Messages* கட்டுரைகள் ஏன் அவர்கள் வலைத்தளத்தில் பார்த்தவுடன் மறுநாள் அந்த இணைப்பு காணாமல் போகிறது என்பதை விளக்கி, அவர்கள் அந்த அளவுக்கு மற்றவர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள் என்று அத்தனை வருட மர்மத்திற்கு விடையளித்தார். அதன் பின்னர் நடந்த கலந்துரையாடலில் பணம், பணம் எப்படி தன்னைத்தானே பெருக்கிக்கொள்கிறது என அவர்கள் இதுவரை அறியாத விஷயங்களைத் தெளிவுபடுத்தி, **அந்த புத்தகத்தின்** பின்னாலும், அவர்கள் அதைப் பயன்படுத்தி உருவாக்கியுள்ள AIS மென்பொருள் மூலமும் அத்தகைய பணத்தையும், செழுமையையும் அளவில்லாமல்

உற்பத்தி செய்யலாம் என விளக்கினார். அதன் அருமை அவர்களுக்கே தெரியாமலிருந்த போதிலும், அவர்களின் எதிரிகளனைவருக்கும் தெரிந்திருந்தது. எனவே தான் அவர்கள் என்ன விலை கொடுத்தும், அதைத் திருடி தங்கள் உடைமையாக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள், அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு **"புனித புத்தகமாகும்" (Holy Grail)** என்னும் விளக்கம் பார்ட்னர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பல நாட்கள் இதைப்போல் **அந்த புத்தகத்தில்** உள்ள பல்வேறு கருத்துக்களை விளக்கி, பார்ட்னர்களின் ஜீவியம் விரிவடைவதற்கு ஸ்டேன் உதவி செய்தார்.

அமெரிக்க அரசாங்க அதிகாரியான தாம்சனுக்கு **அந்த புத்தகத்தை** பற்றித் தெரிந்திருந்ததால், பல்வேறு திருட்டு முயற்சிகளுக்கு அவன் காரணமானவனாக இருக்கலாம் என எண்ணி அதை அறியும் பொருட்டு லெவின் திடீரென வாஷிங்டன் கிளம்பிப்போய் அவனைச் சந்தித்தார். அவரைக்கண்டு அதிர்ச்சியடைந்த தாம்சன், லெவினின் அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்தான். லெவின் மேலும் 1990-களின் காலகட்டத்தின் பொழுது நடந்த Long-Term Capital Management (LTCM) சரிவு நிகழ்ச்சியில் தாம்சனின் ஈடுபாட்டைப் பற்றி விவரித்தார். பங்குச் சந்தை வரலாற்றில் உலகை உலுக்கிய நிகழ்ச்சி அது! தாம்சன் அதனுடனான தொடர்பை முற்றிலும் மறுத்த போதிலும், அவனின் உடல் மற்றும் முகபாவங்களை வைத்து அவன் ஏதோ ஒன்றை மறைக்கிறான் என்பது தெளிவாக லெவினுக்கு விளங்கியது. அவருடைய அந்தச் சந்திப்பு, MAI-க்கு எதிரான பல திருட்டு முயற்சிகளுக்கு தாம்சன் பின்னணியாக இருக்கும் பட்சத்தில், அவன் மேலும் அது போன்ற முயற்சிகளை எடுப்பதற்கு யோசிப்பான் என்று லெவின் நம்பினார். மேலும் LTCM விஷயத்தைத் தீவிரமாக ஆராய்ந்ததில், அதில் தாம்சனின் தந்தை லியோனார்ட் தாம்சனுக்கு மிக நெருங்கிய தொடர்பு இருந்தது உறுதியானது.

இதற்கிடையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து, *Accomplish* மென்பொருளில் அவர்கள் கண்ட பிரச்சினையின் தீவிரம் 2007 டிசம்பர் மாதத்தில் முழுவதுமாக விளங்கியது. அந்த மென்பொருள் சரியாக வேலை செய்த போதிலும், சில குறிப்பிட்ட பயனீட்டாளர்கள் அல்லது குழுக்கள் மூலம் தவறான தகவல்கள் தொடர்ந்து வழங்கப்பட்டுக்கொண்டே இருந்ததால், நாளடைவில் அது மென்பொருளின் அனைத்து

தகவல்களையும் பாழ்படுத்தி, அனைத்து பயனீட்டாளர்களுக்கும் தவறான பலன் வரக் காரணமாயிருந்தது. ஒரு வகையில் பார்த்தால் இவ்வளவு ஆரம்ப கட்டத்திலேயே அந்தப் பிரச்சினை கண்டுபிடிக்கப்பட்டது அவர்களுக்கு ஆறுதலாயிருந்தது. தவறான தகவல்களை பிரித்துப் பார்க்கும் திறன் அதற்கு இல்லாததால், அந்த மென்பொருளின் குறைபாட்டை உணர்ந்த அவர்கள் அதை விற்பனை செய்வதைத் தற்காலிமாக நிறுத்தி வைத்ததோடு மட்டுமல்லாமல், பயனீட்டாளர்களின் பிரச்சினைக்கு முழுப் பொறுப்பும் ஏற்றுக்கொண்டனர். அந்தச் செய்தி வெளிவந்தவுடன், ஆயிரக்கணக்கான நஷ்டஈடு வழக்குகளை MAI எதிர்கொண்டது. அவற்றின் மொத்த மதிப்புத் தொகை 1 பில்லியன் டாலர்கள் வரை இருக்கலாம்!

ஏற்கனவே MAI-ஐ தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கனவு கண்டு கொண்டிருந்த ஓப்பன்ஹாவருக்கு அந்தப் பிரச்சினை பழம் நழுவி பாலில் விழுந்தது போலாயிற்று. உடனடியாக அவனது உத்தரவின் பேரில் சில வழக்கறிஞர்கள் MAI-க்கு பேச்சுவார்த்தைக்காக வந்தனர். அதில் அவர்கள் *Accomplish* பிரச்சினையின் நஷ்டஈட்டை MAI-ஆல் சமாளிக்க முடியாது எனக் காரணம் கூறி, அதனால் அவமதிப்பு செய்யும் வகையில் 25 மில்லியன் டாலருக்கு அந்தக் கம்பெனியை வாங்குவதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்தனர். MAI அதைத் தைரியமாக நிராகரித்ததுடன், ஓப்பன்ஹாவரின் 33% பங்குகளை இரட்டிப்பு விலைக்கு வாங்க விரும்புவதாகத் தகவல் அனுப்பினர்.

அதன் பின்னர் நஷ்டஈடு வழக்குகளையோ, ஓப்பன்ஹாவர் அச்சுறுத்தலையோ பற்றிக் கவலைப்படாமல் MAI பார்ட்னர்கள் *Accomplish²* மென்பொருளை சரி செய்யும் பொருட்டு அதில் தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்தனர். புரபசர் ஸ்டேனும் அந்தப் பிரச்சினையைப் பற்றி **அந்த புத்தகத்தின்** மூலம் தீவிரமாக ஆராய்ந்து, அவர்கள் பொய்மையாலும் தீமையாலும் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, அதை நீக்குவதற்கும், அந்த மென்பொருளை மேலும் நேர்த்தியாக்குவதற்கும் ஆலோசனைகள் வழங்கினார். மேலும் அந்நேரத்தில் ஸ்டேன், தான் சில அறிக்கைகளை நகல் எடுக்க முற்படும் பொழுது ஏற்பட்ட அந்த வித்தியாசமான அனுபவத்தின் மூலமாக அவர் **“தலைகீழ்” (Inversion)**

விதியை அறிந்ததோடு, அது எவ்வாறு உலகில் சாதித்த பெரும் கம்பெனிகளான Sears, Amazon, Google போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனையும் பார்ட்னர்களுக்கு விளக்கினார். எனவே அவர்கள் மென்பொருளின் அறிவுத்தளம் (knowledge base), தலைகீழ் விதிகள், திருவுருமாற்றம், முரண்பாடுகள், எதிரானவைகள் போன்ற அனைத்து விதமான சட்டங்களையும் உள்ளடக்கியதாக இருந்தால் மட்டுமே அந்த மென்பொருளால் எந்தவிதமான பொய்மையையும் அனுமதிக்க முடியாது என்பதனை வலியுறுத்தினார்.

அவரது ஆலோசனையின் படி, ஆன்யாவும் மற்ற மென்பொருள் வல்லுனர்களும் *Accomplish²* வை சிறப்பாக வடிவமைக்க ஆரம்பித்தனர். ஏப்ரல் 2008-க்குள் பரிசோதனை ஓட்டத்திற்கு தயார்ப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது. அடுத்து அப்பொருளை மார்க்கெட்டிங் பண்ணுவதற்கு என்ன மாதிரி வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற விவாதத்தின் போது டேன் அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் அதை அனைவருக்கும் இலவசமாகக் கொடுக்கவேண்டும் என்றார். **அந்த புத்தகத்தில்** இருந்த “**Grow by Giving”** என்னும் ஆதார கருத்தைப் புரிந்து கொண்ட ஸ்டேனுக்கு மட்டும் டேனின் பதில் எதிர்பார்த்தவண்ணம் இருந்தது.

அவ்வாறு *Accomplish²* வளர்ந்துகொண்டிருக்கும் வேளையில், திடீரென்று ஒரு நாள், 2008-ஆம் ஆண்டு பிப்ரவரி 29-ஆம் நாளன்று, ஓப்பன்ஹாவர் MAI-க்கு வருகை புரிந்தான். அனைத்து பார்ட்னர்களையும் சந்தித்த பின்னர், *Accomplish²* மென்பொருள் இலவசமாக அனைவருக்கும் வழங்கப்படும் என்பதைக் கேட்டு கடும் கோபம் அடைந்தான். ஏற்கனவே பல்வேறு சட்ட வழக்குகளில் சிக்கியிருக்கும் நிலையில், தற்போது *Accomplish²* மென்பொருள் இலவசமாக வழங்கப்படும் என்னும் முடிவு அவர்களது நிறுவனத்தை மேலும் பலவீனமாக்கும் என்பதால் MAI-ஐ விட்டு விலகுவதாகக் கூறினான்.

MAI-க்கு பல்வேறு நெருக்கடிகள், தொல்லைகள், பிரச்சினைகள் கொடுத்த ஓப்பன்ஹாவர், சில மாதங்களுக்கு முன்பு MAI-இன் நிலைமையைப் புரிந்து கொண்டு

அதை அடிமட்ட விலைக்கு வாங்க நினைத்த ஓப்பன்ஹாவர், இப்பொழுது தானே விலக விரும்புகிறான் என்றால் அது எப்பேர்ப்பட்ட வாய்ப்பு, MAI-க்கு? அவன் செய்ததை எல்லாம் திரும்பச் செய்து, அவனைப் பழி வாங்குவதற்கான வாய்ப்பல்லவா அது? அல்லது அவனைப்போல அடிமட்ட விலைக்கு அவன் பங்கை வாங்குவதற்கும் ஒரு பொன்னான வாய்ப்பு அது. இப்படியாக பொதுவாக எல்லோருக்கும் நினைக்கத் தோன்றும் நிலையில், டேன் ஓர் அசாதாரணமானதான முடிவைக் கொடுத்தார். அவர் நேர்மையின் உச்சத்தில் இருந்து செயல்பட்டு, அவனே வியக்கும் அளவுக்கு அவன் பங்குகள் அனைத்தையும் அதன் விலையில் வாங்கிக்கொள்வதாகக் கூறி 200 மில்லியன் டாலர்கள் முதல் பணமாகவும், மீதியை சமஅளவுத் தொகையாக அடுத்து வரும் எட்டு காலாண்டுக்குள் கொடுத்துவிடுவதாகவும் கூறினார். பின்னர் மற்ற பார்ட்னர்களிடம், அவனுடைய நிலைமையைப் பயன்படுத்தி தரக்குறைவாக நடக்க தான் விரும்பவில்லை என்றும், மேலும் அவனுடைய கடனை முழுவதும் கொடுத்த பின்பு MAI அந்த கர்மத்தில் இருந்து நீங்கிவிடும் என்றும், அவனுடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளும் அதனால் நீங்கிவிடும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

*Accomplish²* பரிசோதனை வெளியீட்டைத் தொடர்ந்து, 2008 ஏப்ரல் 24-ஆம் நாள் *Accomplish²* வெளியிடப்பட்டது. அந்த இரண்டாம் பதிப்பை *UNIAC* (Universal, Networked, Intelligent Accomplishment Consciousness) என்ற பெயரில் வெளியிட்டார்கள். முந்தைய பதிப்பில் உள்ள அனைத்து தவறுகளையும் நீக்கி விட்டதாலும், மேலும் இலவசமாக விநியோகிக்கப்பட்டதாலும், *UNIAC* ஒரு குறுகிய காலத்திற்குள் தனிச்சிறப்புமிக்க வெற்றியாக மாறியது. அந்த வெற்றியையும் தாண்டி, அந்த நேரத்தில் அப்படிப்பட்ட ஒரு மென்பொருள் உலகில்லாத பொழுது அதற்கெதிரான எதிர்ப்பும் கிளம்பியது. *UNIAC*-ஐ கல்வித்துறையைச் சார்ந்த அறிஞர்கள் ஒரு சந்தேகத்துடனே பார்த்தனர். இவையனைத்துக்கும் தீர்வு ஏற்படும் வகையில் மக்கள் சபையில் பொது விவாதம் நடத்துவதே சரியாக இருக்கும் என நினைத்து ஸ்டேன், அதற்குத் தானே MAI-இன் பிரதிநிதியாகச் செயல்படவும் விரும்பினார். அடுத்து வந்த பல நாட்களுக்கு சான்பிரான்ஸிஸ்கோ பே பகுதியில் உள்ள வானொலி உரையில் தொடங்கி, நாடு

முழுவதும் பல வானொலி உரைகள், விவாதங்கள், தொலைக்காட்சி கலந்துரையாடல்கள், விவாதங்கள் நடத்தப்பட்டன. லாரி கிங் நேரடித் தொலைக்காட்சி தொடரில் (Larry King Live Show) நடந்த விவாதம் மக்களுக்கு ஒரு புதிய விழிப்புணர்ச்சியைக் கொடுத்தது. அதன் பின்னரும் எதிர்ப்பு எஞ்சியிருந்த போதிலும், MAI மற்றும் அதன் மென்பொருள்கள் மீது யாரும் அவதூறு பரப்பவோ, அழிக்க நினைக்கவோ முடியாது என உலகுக்கு அது அறிவித்தது.

அறிஞர்களின் எதிர்ப்பு சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியதைத் தொடர்ந்து, பொது மக்களிடையே *UNIAC* பெரும் வரவேற்பைப் பெற்றது. அனைவரும் MAI மென்பொருள்களை விரும்பி வாங்கி பயன்படுத்தத் தொடங்கினார்கள். பொது மக்கள் அனைவரும் ஒரே தளத்தில் தங்கள் கருத்துக்களை, அனுபவங்களை, முடிவெடுக்கும் திறன்களைப் பகிர்ந்து கொண்டதால், ஒருவர் மற்றொருவரைப் பார்த்து கற்றுக்கொள்ள ஆரம்பித்ததால், மனித ஜீவியத்தை ஒருங்கே உயர்த்தி, உலகளாவிய சமுதாயத்தின் வெற்றிக்கு *UNIAC* வித்திட்டது. இதன் மூலம் நடந்த மற்றொரு எதிர்பாரா நன்மை என்னவென்றால், முதலில் போடப்பட்ட நஷ்டஈடு வழக்குகள் தானாகவே மறையத் தொடங்க, அவர்களால் ஓப்பன்ஹாவருக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகையை திட்டமிட்டிருந்த பல நாட்களுக்கு முன்னதாகவே அவர்களால் அடைக்க முடிந்தது. *UNIAC*-இன் வெற்றி பல நாடுகளுக்கும் பரவியதால், சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிடமிருந்து புதிய புராஜெக்ட் வாய்ப்புகள் வர ஆரம்பித்தன.

*UNIAC*-இன் தனிச்சிறப்புமிக்க வெற்றி, புதிய பரிணாமத்தில் அதன் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வித்திட்டது. அது *UNIAC* மணி விளையாட்டு *(UNIAC Bead Games)* என அழைக்கப்பட்டது. பார்ட்னர்கள் அது ஒரு திருப்புமுனையான மென்பொருளாக விளங்கும் என்றும், அதன் மூலம் வாழ்வில் சாதிப்பது குறித்த பாடங்களை இளம் தொழிலதிபர்களுக்கு, கல்வித்துறைக்கு எனப் பல துறைகளுக்கு எடுத்துச் செல்லலாம் என்றும் உணர்ந்து அதன் தொடர்பான புராஜெக்டில் தீவிரமாக ஈடுபட்டனர். 2008-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் நாள் தொடங்கி பல்வேறு விளையாட்டு மென்பொருள்கள்

விற்பனைக்கு வந்தன. பல்வேறு துறைகளில் அந்த விளையாட்டுகள் உருவாக்கப்பட்டன -- எப்படி வாழ்க்கையில் முடிவுகளை எடுக்க வேண்டும், மனித ஜீவியத்தின் பல்வேறு நிலைகளை எவ்வாறு அறிவது, மனித பரிணாம வளர்ச்சியின் ஆறு வடிவங்களை எவ்வாறு அறிவது, வாழ்வின் மறுமொழியைக் கண்டுபிடிப்பது, அனந்தத்தின் விளையாட்டு போன்றவை அவற்றுள் சில.

அத்தகைய விளையாட்டினால் ஏற்படும் மகிழ்ச்சியை விட, இன்னொரு அதிசயிக்கத்தக்க மாற்றம் என்னவென்றால், அவற்றை விளையாடும் பொழுது ஆன்மீக அனுபவம் போன்ற அமைதி, சந்தோசம், ஒருமை போன்ற உணர்வுகளை விளையாடுபவர்கள் உணரத் தொடங்கினார்கள். டேன் **அந்த புத்தகத்தை** ஆழ்ந்து படிக்கும் பொழுது அத்தகைய ஆன்மீக அனுபவ உணர்வுகளைக் கண்டுள்ளார். இப்பொழுது அந்த விளையாட்டுகள் மூலம் **அந்த புத்தகத்தின்** ஜீவியம் விளையாடுபவர்களுக்குப் போகிறதென்பதை அறிந்து அவர் பெரும் மகிழ்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார். மேலும் அது தொடர்பான விஷயங்கள் பெரிதாகவும், தீவிரமாகவும் வரத்தொடங்கியதைக் கண்ட பார்ட்னர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டனர். அப்படியென்றால், உளவியல் வளர்ச்சி, ஆன்மீக முன்னேற்றம் போன்ற துறைகளில் *UNIAC* பயன்படுமா, அது போன்ற துறைகளில் MAI காலடி எடுத்து வைக்கலாமா என அவர்கள் யோசிக்கத் தொடங்கினர்.

***

## பகுதி 6: பரிணாமம்

*UNIAC* மற்றும் *Bead Games*-இன் வெற்றிக்குப் பின்னர் புரபசர் ஸ்டேனும், பார்ட்னர்களும் பெரு மகிழ்ச்சியடைந்து இருந்தனர். அந்தச் சூழ்நிலை மிகவும் சிறப்பாக இருந்தது. இருப்பினும் ஜனவரி 19, 2009 அன்று நடந்த நிகழ்ச்சிகள் எதிரிகள் தங்கள் தாக்குதல் முயற்சியிலிருந்து சிறிதும் தவறவில்லை என்பதனை எடுத்துக்கூறின. அந்நாளில் பார்ட்னர்கள் அனைவரும் புது ஜனாதிபதி பதவியேற்பு விழாவிற்காக வாஷிங்டன் சென்றிருந்தனர். புரபசர் ஸ்டேன் மட்டும் MAI-இல் தனித்திருந்து **அந்த புத்தகத்தை** படித்துக்கொண்டிருந்தார். அன்றிரவு தூங்கிக்கொண்டிருக்கும் வேளையில், திடீரென எழுந்த ஒரு வெடிப்புச் சத்தம் அவரை எழுப்பியது. மிகவும் பயந்து போன அவருக்கு முதலில் ஞாபகம் வந்தது **அந்த புத்தகத்தின்** பாதுகாப்பு. அதை எடுத்து தான் படுத்திருந்த சோபாவின் அடியில் தள்ளி நன்றாக மறைத்துவிட்டு, ஒரு போர்வையை தலை முதல் கால் வரை மூடிவிட்டு நன்றாக ஆழ்ந்து உறங்குவதைப் போல நடிக்கலானார். ஒரு கணம் கழித்து, அவர் அறையின் பூட்டை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது. ஓர் உருவம் உள்ளே வந்து அனைத்து மேசை இழுப்பறைகளையும் மெதுவாகத் திறந்து பார்த்தது. அதிர்ஷ்டவசமாக அவரை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டுப் போய்விட்டது.

அதிர்ச்சியில் அப்படியே சிறிது நேரம் உறைந்திருந்த ஸ்டேன் அதன்பின் பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து விவரத்தைத் தெரிவித்தார். மறுநாள் பார்ட்னர்களை அழைத்து அந்த விவரங்களைத் தெரிவித்தார். அதிர்ஷ்டவசமாக அவருக்கும், **அந்த புத்தகத்திற்கும்** ஒன்றும் நேரவில்லை. திருட வந்தவன் வெடிபொருள்களை உபயோகிப்பதில் தேர்ச்சி பெற்றவனாக இருக்க வேண்டும். மேலும் அவன் MAI-இல் பணி புரிவதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது, அதனால் தான் பார்ட்னர்கள் அனைவரும் இல்லாத நேரத்தில் இந்த கொள்ளை முயற்சி நடந்திருக்கிறது. மறுநாள் காவல் அதிகாரி பேன் (Byrne) விசாரணைக்கு வந்தார். அந்த விசாரணையின் பொழுது, அங்கிருந்த பாதுகாப்பு பெட்டி ஒன்றைத் திறக்கும் பொழுது அதில் **"நாங்கள் தேட வந்ததைக்**

**கொடுத்துவிடவும். இல்லையென்றால் விளைவுகள் விபரீதமாக இருக்கும்"** என்ற எச்சரிக்கை வாசகம் உள்ள ஒரு கடிதம் இருந்தது.

அதன் பின்னர் பார்ட்னர்களோடு நடந்த கலந்துரையாடலின் போது, இப்போது நடைபெற்ற திருட்டு முயற்சியை விளக்குவதற்காக புரபசர் ஸ்டேன், மேக்ஸ் தியான் பற்றிய விவரங்களை மீண்டும் விவரித்தார். தியானுக்கு **அந்த புத்தகத்தை** பற்றித் தெரிந்திருந்தது. அதை அடைவதற்காக 1927-இல் அவர் இறக்கும் வரை பல்வேறு முயற்சிகள் செய்தார், எனினும் அதில் வெற்றி ஏதும் கிடைக்கவில்லை. அவருடைய இறப்பிற்குப் பின், அவரைப் பின்பற்றிய பல இரகசிய சங்கத்தைச் சார்ந்தவர்கள் பெருவாறு முயற்சி செய்தனர். அவற்றுள் LAP (Librum Arcanum Potestas) சங்கமும் ஒன்று. ஸ்டேனின் ஆராய்ச்சியில் அவர்கள் அதைத் தீவிரமாகத் தேடி வருவதாகவும், அதை அடைவதற்கு எந்த விலையும் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருப்பதற்கும் சான்றுகள் கிடைத்தன. அவர்கள் ஜீவியத்தின் மூலம் தொடர்பு கொள்வதாலும், செயல் படுவதாலும், அவர்களை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவும் முடியாது, யாராலும் பிடிக்கவும் முடியாது. அதன் பின்னர் ஸ்டேன் **அந்த புத்தகத்தை** ஆழ்ந்து படித்து அப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு அடைய விரும்புவதாகத் தெரிவித்தார். அடுத்து வந்த பல நாட்களுக்கு ஸ்டேன் தன்னுடைய அறையை விட்டு வெளி வரவே இல்லை. அவர் எந்நேரமும் **அந்த புத்தகத்தை** ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தார்.

பல நாள் தொடர்ந்த காவல் விசாரணையில் உருப்படியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஜனவரி 29-ஆம் தேதி MAI அலுவலகத்திற்கு அருகே உள்ள ஓர் இடத்தில் வெடிகுண்டுகள் இருப்பதாக மர்ம தொலைபேசித் தகவல்கள் வந்தன. காவல் அதிகாரிகள் தகுந்த நேரத்தில் செயல்பட்டு அதைச் செயலிழக்கச் செய்துவிட்டாலும், அது தங்களுக்கான நேரடி அச்சுறுத்தல் என்பதனை ஸ்டேன் உணர்ந்து கொண்டார். அப்புத்தகத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சியைச் செயல்படுத்துவதற்கு அவருக்குத் தனிமையில் 96 மணி நேரங்கள் தேவைப்படுவதாகவும், ஆகவே அந்த வார இறுதி நாட்களில் அவர்கள் பெர்க்லியில் இல்லாது இருக்கும்படியும் பார்ட்னர்களைக் கேட்டுக்கொண்டார். வார இறுதி நாட்களுக்கு முன் ஸ்டேன் தன் வீட்டில் அனைவருக்கும்

விருந்து கொடுத்தார். அங்கு அனைவரோடும் ஆழ்ந்த, மனத்தைத் தொடும் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அதன் பின்னர் பார்ட்னர்கள் பெர்க்லியை விட்டுக் கிளம்ப, ஸ்டேன் மட்டும் MAI அலுவலகத்தில் தனித்து இருந்தார்.

டேன் மற்றும் பார்ட்னர்கள் திங்கட்கிழமை MAI-க்கு திரும்பி வந்த பொழுது ஸ்டேனையும் காணவில்லை, அவர் வீட்டிலும் இல்லை, **அந்த புத்தகத்தையும்** காண வில்லை. உடனே அவர்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். காவல் அதிகாரிகள் CCTV கேமராவை ஆராய்ந்து பார்த்ததில், ஸ்பானிய மனிதர்களைப் போலத் தோற்றம் கொண்ட இருவர் MAI அலுவலகத்தின் பின்புறக் கதவு வழியாக சிறப்பு குறியீட்டு அட்டை மூலம் உள்ளே நுழைந்ததையும், சிறிது நேரம் கழித்து அவர்கள் ஸ்டேனை தரதரவென்று இழுத்து வந்து காரில் ஏற்றுவதையும் கண்டனர். அதைக்கண்ட பார்ட்னர்களுக்கு ஸ்டேனின் பாதுகாப்பு குறித்து மிகவும் கவலையாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. மறுநாள் அனைத்து உள்ளூர் ஊடகங்களிலும் புரபசர் ஸ்டேன் கடத்தப்பட்ட விவரம் வெளியாயிருந்தது.

காவல் அதிகாரிகள் நடத்திய தொடர் விசாரணையில் அவர்கள் ஸ்டேனை சான் பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் பார்த்ததற்கு CCTV கேமரா மூலம் சான்றுகள் கிடைத்தன. மேலும் அவர் இரண்டு பெரிய பெட்டியுடன் சுதந்திரமாகக் காணப்பட்டார் எனவும், யாரும் அவரைக் கடத்தியமாதிரித் தெரியவில்லை எனவும் கிடைத்த தகவல்கள் MAI பார்ட்னர்களை சிறிது நிம்மதி கொள்ளச் செய்தது. மறுநாள் ஊடகங்கள் அனைத்திலும் ஸ்டேன் கடத்தப்படவில்லை எனவும், அவர் திடீரென்று MAI-இல் இருந்து கிளம்பி விட்டார் எனவும், அவருடன் MAI-க்கு உடைமையான ஓர் இரகசிய புத்தகத்தை எடுத்துச் சென்றுவிட்டார் எனவும் விவரித்தன. ஸ்டேன் உண்மையில் இந்தியாவுக்குச் சென்றுவிட்டதாகவும், அவர் வினய்யின் வீட்டிற்குச் சென்றிருக்கிறார் எனவும், அவர் ஓர் அவசர வேலையாக வந்துள்ளதால் பார்ட்னர்கள் உட்பட யாரையும் தொடர்பு கொள்ள விரும்பவில்லை எனவும் அறிந்த பார்ட்னர்கள் அறிந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. டேன் ஆழ்ந்து யோசிக்கையில் அவருக்கு ஒன்று தெளிவாகப் புரிந்தது. **அந்த புத்தகத்தின்** மூலம் அவர்களுக்கு வந்த ஆபத்தை விலக்குவதற்காக, **அந்த புத்தகம்** திருடு போய்

விட்டது என உலகுக்கு அறிவிப்பதற்காக புரபசர் ஸ்டேன் செய்த நாடகம் இது! ஆனால் ஏன் அப்படி ஒரு மர்மமான பயணம், அவர்களிடம் கூட சொல்லாமல்? ஒரே புதிராக இருந்தது. மேலும் அதனால் அவருக்கு வரும் எதிர்ப்பை அவர் எப்படி சமாளிப்பார் என யோசித்தும் டேனுக்கு விடை ஒன்றும் கிடைக்கவில்லை. அதன் பின்னர் MAI பார்ட்னர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் காவல் அதிகாரிகளும் தங்கள் விசாரணையை நிறுத்தி விட்டனர்.

ஒரு நாள், டேன் திரும்பி வந்த பொழுது அவர் மேசையில் **அந்த புத்தகத்தை** கண்டார். **"அதே புத்தகம்!"** அதைக் கண்ட அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பிறகு லிம்பியா வந்து அந்தப் புதிருக்கு விடையளித்தாள். அவள் ஸ்டேன் அறையைச் சுத்தம் செய்த பொழுது **அந்த புத்தகம்** சோபாவுக்கு அடியில் இருந்ததாகக் கூறினாள். உலகத்தில் உள்ள அனைவருக்கும் **அந்த புத்தகம்** தொலைந்துவிட்டது என அறிவித்த புரபசர் ஸ்டேன் உண்மையில் **அந்த புத்தகத்தை** அவர்களிடமே தான் விட்டுவிட்டுச் சென்றிருந்தார். ஆனால் என்ன காரணமாக இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார்?, டேனுக்கு ஒன்றும் புரியவில்லை!

**உண்மையில், புரபசர் என்ன தான் செய்தார்?** அவர் ஆரம்பத்திலேயே ஒவ்வொரு விஷயங்களையும் எப்படிச் செய்வது எனத் துல்லியமான ஒரு திட்டம் வைத்திருந்தார். அந்த விருந்து நிகழ்ச்சிக்குப்பின் அவர் ஒரு காரணத்துடன் தன்னுடைய வீட்டில் வேலை செய்யும் ஜுவான் மற்றும் ரோசாவை ஊதியத்துடன் விடுமுறை கொடுத்து அந்த வார இறுதி நாட்களில் அவர்கள் அங்கு இல்லாதிருக்கும்படிப் பார்த்துக் கொண்டார். பார்ட்னர்களுக்கு அவர் கிளம்புவது தெரியாமல் இருக்க வேண்டும் என்பதாலும், ஒரு ஆள் கடத்தல் சம்பவம் மாதிரி இருக்க வேண்டும் எனவும் எண்ணி பார்ட்னர்களை முதலில் பெர்க்லியில் இருந்து அனுப்பி விட்டார். அந்த நாள் இரவு ஸ்டேன் நெடுநேரம் வேலை செய்து கொண்டிருந்தார். அவரே பல்வேறு விதமான பத்திரிகை அறிக்கைகளை தயாரித்து அடுத்த வாரம் அதை ஊடகங்களுக்கு சேர்த்துவிடும் படிக் கடிதம் எழுதி தன்னுடைய வழக்கறிஞருக்கு அனுப்பி விட்டார். ஜுவானின் சகோதரர்கள் லூயிஸ் மற்றும் ஜோஸ் ஆகிய இருவரின் உதவியோடு அந்த ஆள் கடத்தல் சம்பவம் போன்ற ஒரு

நாடகத்தை நிறைவேற்றினார். அவருடைய திட்டங்கள் அனைத்தும் மிகச் சிறந்த முறையில் நிறைவேறியது. அதன்பிறகு அவர் இந்தியாவுக்கு வந்து தன்னுடைய கல்லூரி நண்பர்களின் வீட்டுக்குச் சென்றார். ஆம்! ஸ்டேனும், வினய்யின் பெற்றோர்களான ரோஜரும், மிட்டாவும் ஒரே சம காலத்தில் பெர்க்லியில் படித்தவர்கள், உயிர் நண்பர்கள். மேலும் அவர்களிடம் தன்னுடைய வருகையை இரகசியமாக வைத்திருக்கும்படியும், தொடர்ந்து பல நாட்களுக்கு அவருக்கு ஓர் அவசர வேலை இருப்பதாகவும், அவருக்கு ஒரு பிரிண்டர் அவசரமாகத் தேவைப்படுவதாகவும், பிழை திருத்துவதற்கு அவர்களின் உதவி தேவைப்படுவதாகவும் கூறினார்.

பிப்ரவரி 21, 2009 -- MAI அலுவலகம். டேனும், லெவினும் **அந்த புத்தகத்தில்** உள்ள ஒரு கருத்தைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்த பொழுது, இந்தியாவிலிருந்து ஒரு பார்சல் அவர்களுக்கு வந்தது. அவற்றில் இரண்டு பெரிய புத்தகங்கள் இருந்தன. அவற்றில்

**அனந்தத்தின் விளையாட்டு (The Infinite Game)**

**உயர்தர பயனீட்டாளர்களுக்கான கையேடு (Advanced User's Manual)**

**மொழி பெயர்த்தவர்: ஜோசப் ஸ்டேன் (Transcribed from the original by Joseph Stearne)**

எனத் தலைப்பிடப்பட்டிருந்தது. உள்ளே பார்த்தால் அது வரிக்கு வரி **அந்த புத்தகத்தில்** உள்ளவை திரும்ப எழுதப்பட்டிருந்தது. டேனும் லெவினும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவர்களுக்கு அப்பார்சல் வந்த அதே நேரத்தில் ரே, வினய் மற்றும் ஆன்யாவுக்கும் அவர்கள் பெயரிட்டு வந்திருந்தது. மேலும் ஸ்டேன் தன்னுடைய வேலைக்காரர்களான ஜூவானுக்கும், ரோசாவுக்கும் **அந்த புத்தகத்தை** அனுப்பி, அத்தோடு தன்னுடைய வீட்டுப் பத்திரங்களையும் அவர்கள் பெயருக்கு மாற்றி எழுதியிருந்தார். மறுநாள் காலை ஒரு FedEx வண்டியில் பல்வேறு பெட்டிகளில் மொத்தம் 600 **அதே புத்தகங்கள்** MAI அலுவலகத்திற்கு வந்து இறங்கின. பிப்ரவரி 24-ஆம் நாள் அனைத்து ஊடகங்களும் புரபசர் ஸ்டேன் தொடர்பான விஷயங்களை அவர் காணாமல் போனதில் தொடங்கி **அந்த புத்தகம்** வந்தது வரையிலான விஷயங்களை விளக்கி

எழுதியிருந்தன. இப்படியாக அவர் அனைவரது பார்வையிலும் அவரவர்களுக்கான பிரச்சினையை முழுவதும் சரி செய்திருந்தார். அவரின் புத்திசாலித்தனத்தையும் அவர் நிறைவேற்றியிருந்த முறைகளையும் கண்டு வியந்த டேன் அவர் வயதுக்கு மீறிய எப்பேர்ப்பட்ட கடின உழைப்பை, விடாமுயற்சியோடு, அந்தக் குறுகிய காலத்திற்குள் அவர் நிறைவேற்றியிருக்கிறார் என நன்றியுடனும் ஆச்சரியத்துடனும் நினைவு கூர்ந்தார். அதன் மூலம் MAI பார்ட்னர்கள் எதிர்நோக்கியிருந்த அச்சுறுத்தலை ஸ்டேன் முற்றிலும் அழித்து விட்டார்.

**எல்லாம் சரி, அந்த எதிரிகளுக்கு என்ன ஆயிற்று?** அந்த வார இறுதியில் பலர் புரபசர் டெண்ட்-க்குச் சொந்தமான பண்ணை வீட்டில் கூடியிருந்தனர். அவர்கள் அனைவரும் பல்வேறு இரகசிய சங்கத்தைச் சேர்ந்தவர்களானாலும், தியானின் பேரால் ஒன்று கூடி உழைப்பவர்கள். அதில் தாம்சனின் தந்தை, ஆல்பர்ட் சைமன், MAI-ஐச் சார்ந்த எரிக் கிரீன் ஆகியோரும் அடக்கம். அவர்களனைவருக்கும் உள்ள ஒரே நோக்கம், **அந்த புத்தகம்** பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வராமல் தடுப்பது. அன்று எரிக் கிரீன் **"அனந்தத்தின் விளையாட்டு"** புத்தகத்தை அனைவருக்கும் ஒரு பிரதி கொடுத்தான். அவர்களின் நோக்கம் இனி நிறைவேறப் போவதில்லை, ஏனெனில் **அந்த புத்தகம்** இணையத்திலும் வெளியாகி உலகத்தின் சொத்தானது. அத்துடன் தியானின் பேரில் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு அன்றோடு ஒரு முடிவு வந்தது. அதுதான் அவர்களின் இறுதிச்சந்திப்பு. இறுதியில் அந்த எதிரிகளுக்கும் பயன்படும் வகையில் **அந்த புத்தகம்** கிடைத்தது தான் ஒரு முத்தாய்ப்பான முடிவு!

அனைவரும் மகிழ்ந்திருந்த வேளையில், டேனுக்கு இன்னும் இரண்டு புராஜெக்டுகள் முடிப்பதைப் பற்றி ஓர் எண்ணம், அவைகள் *Evolve* மற்றும் *Fusion*. உளவியல் வளர்ச்சிக்கான *Evolve* மென்பொருள் தயாரிக்கும் புராஜெக்ட்டை அவர்கள் ஏற்கனவே தொடங்கிருந்தனர். *Fusion*-ஐப் பற்றி அவரின் திட்டம் சிறிது தெளிவில்லாமலேயே இருந்தது. அவரின் பார்வையில் *UNIAC* வாழ்வில் செல்வவளத்தைக் கொண்டு வருவதற்கான மென்பொருள், தனிமனித சந்தோஷத்திற்காக *Evolve*,

ஜீவியத்தை வளர்க்கும் மென்பொருள் *Fusion,* அது தான் அவர்களது உச்சகட்ட சாதனையாக இருக்கும். அனைத்தும் பூர்த்தியாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

இதற்கிடையில் *UNIAC*-இன் வெற்றி பல நாடுகளுக்கும் பரவியிருந்த வேளையில், 2009 மார்ச் மாதத்தில் லெவினுக்கு இஸ்ரேலின் பிரதம மந்திரி அலுவலகத்திலிருந்து பாலஸ்தீன பிரச்சனையைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்கான நேரடி அழைப்பு வந்தது. அதைப்பற்றி பார்ட்னர்களுடன் கலந்து பேசிய அவர் ரே மற்றும் லாரனுடன் இஸ்ரேல் செல்லத் தயாரானார். வினய்யும் ஆன்யாவும் இந்தியாவுக்குச் செல்வதற்குத் திட்டம் தீட்டியிருந்தனர். ரேயும் இஸ்ரேல் பணியை முடித்துவிட்டு குடும்பத்துடன் இந்தியா வந்து புரபசர் ஸ்டேனைச் சந்திப்பதாகத் திட்டம். ஒருவிதத்தில் பார்த்தால், டேனுக்கு அனைத்துப் பார்ட்னர்களையும் கண்டு ஒரு பெருமை கலந்த பொறாமை இருந்தது, ஏனெனில் அவர்கள் அனைவருக்கும் வாழ்வில் தாங்கள் சாதிக்க நினைத்தது நடந்து விட்டது. அவருக்குத் தான் அடுத்து என்ன என்று தெரியவில்லை. இருப்பினும், அவருடைய வாழ்விலும் தான் எத்தனை விதமான மாற்றங்கள்? **அந்த புத்தகம்** மேல் அடுக்கிலிருந்து அவர் மேல் விழுந்த அந்த நாள் முதல் ஒவ்வொரு நாளும் புதுமையான, நிறைவான தருணங்கள். அவற்றையெல்லாம் அவர் நன்றியுடன் நினைவு கூர்ந்த நேரத்தில் அவர் ஓர் ஆன்மீக அனுபவத்தை எதிர் கொண்டார். அந்த ரம்மியமான சூழ்நிலையில் அவருக்குள் இனிமை, சந்தோசம், அமைதி என அனைத்து ஆன்மீக குணங்களும் அவருக்குள் இறங்கத் தொடங்கின. அது ஓர் அற்புதமான, மகிழ்ச்சியான தருணம். அவர் ஒரு சிலிர்ப்பினை உணர்ந்தார்.

அடுத்த சனிக்கிழமை அனைத்து பார்ட்னர்களும் தங்களின் திட்டப்படி ஒவ்வொரு நாட்டுக்குப் பிரிந்து சென்றனர். இத்தனை ஆண்டுகளில் அனைவரும் டேனைத் தனியே விட்டு நீங்குவது இது தான் முதல் முறை. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் என்ன செய்வது எனத் தெரியாமல் **அந்த புத்தகத்தை** எடுத்துக்கொண்டு ஆரம்பத்தில் இருந்து படிக்க ஆரம்பித்தார். அந்த நேரத்தில் தொலைபேசி அழைத்தது. அவரைச் சந்திக்க ஒரு பார்வையாளர் வந்திருப்பதாக பாதுகாவலர் அறிவித்தார். கதவைத் திறந்து பார்த்தால் ஓர் அழகிய இளம்பெண். அது கிறிஸ்டி. புரபசர் ஸ்டேனின் சகோதரியின் மகள்! புரபசர்

ஸ்டேன் அவளை வரச்சொன்னதைத் தொடர்ந்து அவள் பிரான்சிலிருந்து அங்கு வந்திருந்தாள். அப்பொழுதுதான் டேனுக்கு நினைவு வந்தது. அவளைப் பல வருடங்களுக்கு முன்பு நடந்த AI கருத்தரங்கில் புரபசர் ஸ்டேனுடன் சந்தித்திருக்கிறார். ஸ்டேன் அங்கு இல்லாததைக் கண்டு சிறிது கவலையுற்ற கிறிஸ்டியை அவர் நலமுடன் இருப்பதாகக் கூறி டேன் ஆறுதல் படுத்தினார். அவளிடமும் ஸ்டேன் எழுதியிருந்த **"அனந்தத்தின் விளையாட்டு"** புத்தகம் இருந்தது. ஸ்டேனைப் பற்றி அறிய ஆர்வம் கொண்ட அவளுக்கு, டேன் MAI ஆரம்பத்தில் இருந்து தொடங்கி, சமீபத்திய நிகழ்வு வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் கூறி விளக்கினார். அதை முழுவதும் ஆர்வத்துடன் கேட்ட கிறிஸ்டி ஒரு பிரமிப்புடன் அமர்ந்திருந்தாள். எல்லாம் கேட்ட பிறகு, ஸ்டேன் பெர்க்லியில் இல்லாவிட்டாலும், ஏன் அவர் அவளை வரச் சொல்லி கடிதம் எழுதினார் என்பது அவளுக்குப் புதிராகவே இருந்தது. டேனுக்கு அதற்கான விடை புரியத் தொடங்கியது போல் இருந்தது.

*****

## இக்கதையில் இடம் பெற்றுள்ள சில முக்கிய கதாபாத்திரங்கள்

| | |
|---|---|
| புரபசர் ஸ்டேன் (Prof.Stearne) | - MAI பார்ட்னர்களின் வழிகாட்டி |
| டேன் (Dan) | - MAI பார்ட்னர் |
| ரே (Ray) | - MAI பார்ட்னர் |
| வினய் (Vinay) | - MAI பார்ட்னர் |
| ஆன்யா (Anya) | - MAI பார்ட்னர் |
| லெவின் (Levin) | - MAI பார்ட்னர் (பின்னாளில் சேர்ந்தவர்) |
| லிம்பியா (Limpia) | - MAI உதவியாளர் |
| லாரன் (Lauren) | - MAI அலுவலக நிர்வாகி |
| பில் (Bill) | - MAI COO, ரே- இன் குடும்ப நண்பர் |
| ராணா (Rana) | - ரே- இன் மனைவி |
| கேட்டியா (Katia) | - ஆன்யாவின் குழந்தை |
| ரோஜர் & மிட்டா (Roger & Mita) | - வினய்யின் பெற்றோர்கள் |
| கிறிஸ்டி (Kristy) | - புரபசர் ஸ்டேனின் சகோதரியின் மகள் |
| ஜுவான் & ரோசா (Juan & Rosa) | - புரபசர் ஸ்டேனின் வீட்டு உதவியாளர்கள் |
| இன்ஸ்பெக்டர் பேன் (Byrne) | - காவல் அதிகாரி |
| ஹாவர்ட் (Howard) | - அமெரிக்க அரசாங்க அதிகாரி |

புரபசர் டெண்ட் (Prof.Dent) - எதிரிக்கூட்டத்தின் தலைவர்

கிரிகோரி தாம்சன் (G.Thompson) - அமெரிக்க அரசாங்க அதிகாரி

L. தாம்சன் (L.Thompson) - கிரிகோரி தாம்சனின் தந்தை

ஆல்பர்ட் சைமன் (Albert Simon) - புத்தகத்தை விடாது தேடியவன்

டோனி பிரஸ்டன் (Tony Preston) - MAI மென்பொருள் வல்லுநர்

எரிக் கிரீன் (Eric Green) - MAI புராஜெக்ட் மானேஜர்

R. ஒப்பன்ஹாவர் (R.Oppenhauer) - MAI-க்கு கடன் கொடுத்தவன்

G. ஹென்மன் (G.Henmaan) - ஒப்பன்ஹாவரின் ஒற்றன்

மற்றும் பலர்

*****